Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 06 20-06-94 திங்கட்கிழமை ஓசை 122

## தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு 70 இலங்கையருக்கு அழைப்பு

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் 5ஆம் திகதிவரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள எட்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து 70 தமிழறிஞர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களைவிட வேறுயாராவது அழைக்கப்பட வேண்டியிருப்பின் அவர்களின் பெயர்ப்பட்டியலை அனுப்பிவைக்குப்படி மேற்படி விழாக்குழுச் செயலாளர் இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சரைக் கேட்டுள்ளார். எனவே இம்மாநாட்டில் ஆய்வுக்கட்டுரைகளைப் படிக்க விரும்புவோர் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் யுத்தநிறுத்தம் கண்காணிக்க

# 500 ஐ. நா. அமைதிப்படையினர் தேவை!

## 50 மில். டொலர் செலவாகுமென சி. ஐ. ஏ. அறிக்கையில் மதிப்பீடு

(கொழும்பு)

**இலங்கையில் 500ற்கு மேற்பட்ட படையினரைக் கொண்ட ஐ. நா. படை ஒன்றை நிறுத்த வேண்டும் என அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சி. ஐ. ஏ. வெளியிட்டுள்ள ஓர் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் கெரில்லாக்களுக்கும் அரச படைகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க மேற்கொள்ளப்படும் ஐ. நாவின் இந் நடவடிக்கைக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகவலை ஜலண்ட் பத்திரிகை வெளியிட்டுள்ளது.**

இப் பத்திரிகையில் மேலும் இலங்கையில் ஐ. நா. படையின் தேவையை தமிழ் தரப்பினரே பிரேரித்ததாக அந்த ஆவணம் குறிப்பிடுகிறது. இதற்கான ஐ. நா அமைதிகாக்கும் படை ஒன்றை அமைக்க ஐ. நா பொதுச் செயலாளரோ அல்லது உலகின் எந்த ஒரு நாடாவது பிரேரிக்க முடியும். இதை பாதுகாப்புச் சபையின் ஒன்பது உறுப்பினர்கள் அங்கீகரிக்க வேண்டும் எனினும் இதை பாதுகாப்புச் சபையில் உள்ள நிரந்தர உறுப்பினர் வீட்டோ அதிகாரம் மூலம் நிராகரிக்க முடியும்.

இலங்கைக்கான ஐ. நா. அமைதிப்படை திட்டம் ஐ. நா. செயலாளரினாலோ அல்லது வேறு எந்த ஒரு உறுப்பு நாட்டினாலோ கொண்டு வரப்பட்டதா என்பது இதுவரை தெரியவரவில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இத் திட்டம் பாதுகாப்புச் சபை ஊடாகவும் பொதுச் சபை ஊடாகவும் சென்றிருக்கின்றது. எனினும் இது குறித்து கொழும்பில் வெளியுறவு அமைச்சு எதும் அறிந்திருக்க

## மதுருஓயா பொலிஸ் நிலையங்களை தாக்க புலிகளின் புதிய தாக்குதல் அணி

## ஆறு மூத்த அமைச்சர்களுக்கு எதிராக எதிரணி நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு)

ஆறுக்கும் மேற்பட்ட மூத்த அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சி செய்து வருகின்றன.

சுதந்திரக் கட்சியை சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊழல் மற்றும் முறைகேடுகள் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றில் அமைச்சர்களின் தொடர்புகள் பற்றி தகவல் திரட்டி வருவதாக தெரியவருகின்றது.

அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக நிறைய தகவல்கள் கிடைத்திருப்பதாக சுதந்திரக் கட்சிபாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். கட்சியின் தேர்தல் பிரசாரம் ஊழல் அமைச்சர்களுக்கு எதிராகவே மையப்பட்டிருக்கும் என்று மற்றொரு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரம வீர சூரியாவின் கட்சி அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக கொழும்பு மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. குணரத்னா பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பவுள்ளார்.

## யார் வெல்வார் என நம்புகிறோமோ அவரையேவேட்பாளராக நியமிப்போம்

### சுதந்திரக்கட்சி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றிபெறுவார்கள் என்று சுதந்திரக்கட்சி நம்பும் என்று கட்சி நம்பும் வேட்பாளரையே கட்சி நியமிக்கும் என்றும் அவர் கூறினார்

எந்த வேட்பாளர் மிகவும் இன்னும் எமக்குக் கிடைக்கவில்லை. அறிக்கைகள் கிடைத்ததும் வேட்பாளர் யார் எனத் தீர்மானிப்போம் என்று

# தாக்க புலிகளின் புதிய தாக்குதல் அணி

## 'ஐலண்ட்' பத்திரிகை தகவல்

பொலநறுவை மதுருஓயாப் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களைத் தாக்க விடுதலைப் புலிகள் புதிய சிறு தாக்குதல் அணி ஒன்றை உருவாக்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் இப்பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்கள் இப் புதிய தாக்குதல் குழுவினாலேயே வெற்றிகரமாக தாக்கப்பட்டிருப்பதாகவும் பொலிசாரின் ஆயுதங்கள் பறித்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பிரதீபன் என்பவரது தலைமையிலான இத் தாக்குதல் குழுவின் அதிரடிகள் மேலும் அதிகரிக்கலாம் என பாதுகாப்புப் படை வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுவதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

...கின்றது. எனினும் இது குறித்து கொழும்பில் வெளியுறவு அமைச்சு ஏதும் அறிந்திருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது எனக் கூறப்பட்டுள்ளது.

## மருத்துவமனை திறப்பு

இன்று வடமராட்சி கிழக்கில் பின்தங்கிய பகுதிகளில் வாழும் மக்களின் நலன்கருதி நாகர்

(6 ஆம் பக்கம பார்க்க)

### பூநகரி தாக்குதலின்போது கடமை தவறியதாக

# ஆறு உயர் ராணுவ அதிகாரிகளின் பதவி உயர்வுகள் இடை நிறுத்தம்

## இராணுவ விசாரணைக்குழு சிபார்சு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஆறு மூத்த அதிகாரிகளுக்கு அவர்களுக்கான பதவி உயர்வுகள் ஒரு வருடத்திற்கு இடை நிறுத்தப்பட்டுள்ளது. பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியபோது இருந்த நிலைமைகளைச் சமாளிப்பதற்கு இந்த அதிகாரிகள் தவறியிருப்பதாக இராணுவவிசாரணைக் குழு குற்றம்சாட்டியிருப்பதையடுத்து இந் நடவடிக்கைஎடுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. மேலும் முப்பது கனிஷ்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனமுன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவினால் நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணைக்குழு கூறியிருக்கிறது.

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய வேளையில் பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் றோகான் தளுவத்த, பிரிகேடியர்கெமுனு குலதுங்க, பிரிகேடியர் ஜாலிய நம்முனி,

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பிரேமா கொலை சந்தேக நபர்

# விபரங்கள் வழங்கினால் 30 லட்சம் சன்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பான சந்தேக நபர்களின் விபரங்களை தந்தால் 30 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

பிரேமதாசா கொலை தொடர்பாக தேடப்படும் ஐந்து பேர்களில் விடுதலைப் புலிகள் உளவுப் பிரிவின் தலைவர் பொட்டம்மானும் ஒருவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது இவ்வாறு தேடப்படுபவர்கள் பற்றிய தகவலை அளிப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

பிரேமதாசா கொலை தொடர்பாகவிசாரணைகளில் தமக்கு திருப்தியில்லை என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்திருந்ததை அடுத்து அரசாங்கத்தின் இவ் அறிவிப்பு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கான

## 60 புதியரக கார்களை இறக்கும் முயற்சி தடுப்பு

(கொழும்பு)

பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்காக இறக்குமதி செய்யப்படவிருந்த 60 புதிய ரக பெர்ஜோ கார்கள் அரசின் தலையீட்டையடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. புதிய வாகனம் எதையும் இவ்வருடம் கொள்வனவு செய்ய வேண்டாம் என அரசு பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சேதமடைந்த, பழைய, போரின்போது சேதமடைந்த வாகனங்களையே அரசின் இப்புதிய அறிவிப்பினால் தாம் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றிபெறுவார்கள் என்று சுதந்திரக்கட்சி நம்புகிறதோ அவரையே கட்சி வேட்பாளராக நியமிக்கும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் திரு. தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

மீண்டும் நாம் தோற்கமுடியாது. வெற்றிபெறுவாரளரையே கட்சி நியமிக்கும் என்றும் அவர் கூறினார்

எந்த வேட்பாளர் மிகவும் பிரபலமானவர் என்று கண்டறிவதற்காக எமது கட்சி ஊழியர்கள் வீடுவீடாகச் சென்று வருகின்றனர் என்று சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளர் அனுருத்த ரத்வத்தை கூறினார்.

அவர்களது அறிக்கைகள் ...வில்லை. அறிக்கைகள் கிடைத்ததும் வேட்பாளர் யார் எனத் தீர்மானிப்போம் என்று சி. வி. குணரத்ன எம்.பி கூறினார்.

வேட்பாளர் பற்றி இன்னும் நீங்கள் தீர்மானிக்கவில்லையா? என்று அவரிடம் கேட்டபோது வேட்பாளரை நாம் தீர்மானித்துள்ளோம். திருமதி பண்டாரநாயக்காவை வேட்பாளராக்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். ஆனால் இந்தத் தீர்மானங்கள் இறுதியானவை அல்ல, தீர்மானங்கள் மாற்றப்படலாம் என்று திரு. சேனநாயக்கா சொன்னார்,

அப்போது குறுக்கிட்ட மேல்மாகாண முதலமைச்சரும், சுதந்திரக்கட்சியின் உபதலைவியுமான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா 'எமது தீர்மானம் இறுதியானது. ஆனால் இறுதித் தீர்மானங்கள் கூட ஆதியும் அந்தமுமாகிவிடுவதில்லை. மாறி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுஜன ஐக்கிய முன்னணி

## தேர்தல் விஞ்ஞாபனம் மாத இறுதியில் வெளிவரும்

பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல்விஞ்ஞாபனத்தை இம்மாத இறுதியில் வெளியிடும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அனுமதி பெற்ற பின்னர் இது வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. சிறிமாவோ பண்டாரநாயக்காசிங்கப்பூரில் சிகிச்சை பெற்று திரும்பிய பின்னர் மேற்படி தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடுவார் எனவும் தெரியவருகிறது.

# தடுப்புக்காவலிலுள்ளோரை விடுவிக்க ஜனாதிபதி விஜேதுங்கா ஆலோசனை

(கொழும்பு)

தடுப்புக் காவலிலுள்ள பல கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முடிவு செய்துள்ளார் என கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல் மூலம் தெரியவருகின்றது.

அண்மையில் நடைபெறவுள்ள தேர்தலுக்கான ஒரு பிரசார நடவடிக்கையாகவே இதனை இவர் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் தடுப்புக்காவலிலுள்ளோர் தொடர்பான முழு விபரத்தையும் உடனடியாக தனது கவனத்திற்கு கொண்டு வருமாறு அதிகாரிகளை ஜனாதிபதி பணித்துள்ளதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

இதேவேளை எந்த அடிப்படையில் இவர்களை விடுதலை செய்வது, யார் யாரை விடுதலை செய்வது என்பன தொடர்பாக தமது அதிகாரிகளுடன் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் முதலில் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களே விடுதலை செய்யப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகளவு காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விடுதலை செய்யப்படுபவர்களின் போக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா புகையிரதம் தடம் புரண்டது

### எவருக்கும் காயமில்லை

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து நேற்றுக்காலை கொழும்பு நோக்கி புறப்பட்ட ரயில்வண்டி பொல்காவலை ரயில் நிலையம் அருகே தடம்புரண்டது. எனினும் இவ்விபத்தில் பிரயாணிகள் எவரும் எவ்வித காயத்திற்கும் உள்ளாகவில்லை.

திருத்த வேலைகள் நேற்றிரவு முடிவடையும் என அறிவிக்கப்பட்டது. இன்று வழமையான ரயில்சேவை நடைபெறும் என ரயில்வே திணைக்களம் அறிவித்தது.

## வரி விளம்பரம்

**வெள்ளிப் பாதசரம்**
இந்த நூற்றாண்டிற்கான ஈழத்துச் சிறுகதைத் தொகுப்பு. விற்பனையாகிறது: வசந்தம், தமிழ்த்தாய் புத்தக சாலைகளில். [8569]

**காவேரி சீயாக்காய்ப் பவுடர்**
மக்கள் நலனுக்கு இயற்கை அளித்த சீதனமாகிய 6வகை இயற்கை பொருட்களை அளவுப்பிரமாணத்தின் படி தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது சீயாக்காய்ப்பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டுவாங்கவும் (8598)

**'அக்கரைச் சீமையில்' நாவல்**
இங்கிலாந்து சென்ற ஓர் அழகிய இளம் தமிழ்ப்பெண்ணுக்கு என்ன நடந்தது? 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை உண்மைக் கதைபோலச் சொல்கிறார். பூபாலசிங்கம் புத்தகசாலை (8411)

---

யாழ். மாவட்ட கூ. சபை நடாத்தும்

## 1994 சர்வதேச கூட்டுறவு தினவிழா-

### பாடசாலை மாணவர்களிற்கான போட்டிகள்

# விண்ணப்ப முடிவுத்திகதி 30-06-94

| ஆண்டும், பிரிவும் | பேச்சுப்போட்டிக்கான விடயமும் நேரமும் | கட்டுரைப் போட்டிக்கான விடயமும், நேரமும் |
|---|---|---|
| ஆரம்ப பிரிவு ஆண்டு 4,5 | 'கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம்' (4-5) நிமிடம்) | 'கூட்டுறவு' (30 நிமிடம்) |
| கீழ்ப்பிரிவு ஆண்டு 6,7 | 'கூட்டுறவின் தந்தை றொபேட்ஒவன்' (5-6) | 'எமது கிராமமும் கூட்டுறவும்' 45 நிமிடம்) |
| மத்திய பிரிவு ஆண்டு 8,9 | 'யாழ் மாவட்டத்தின் கூட்டுறவு வரலாறு' (5-6 நிமிடம்) | 'கூட்டுறவில் பெண்கள் பணி' 45 நிமிடம்) |
| மேற்பிரிவு ஆண்டு 10, 11 | கூட்டுறவுக் கொள்கையும் அதன் நடைமுறையும் (6-7) நிமிடம் | கூட்டுறவு சம்பந்தமான விடயம் போட்டி அன்று வழங்கப்படும் |
| அதி மேற் பிரிவு ஆண்டு 12, 13 | 'பாடசாலையில் கூட்டுறவு ஒரு பாடமாக்கப்பட வேண்டுமா? (6-7 நிமிடம்) | கூட்டுறவு சம்பந்தமான விடயம் போட்டி அன்று வழங்கப்படும் |

வினாடி வினா (அ) ஆண்டு 10,11,12,13 மாணவர்கள் பங்குபற்றலாம்.
(ஆ) ஒரு பாடசாலையில் இருந்து இரண்டு மாணவர்களிற்கு மேற்படாமல் பங்குபற்றலாம்.

1) பேச்சு, கட்டுரைப் போட்டிகளிற்கு ஒரு பாடசாலையில் இருந்து ஒவ்வொரு பிரிவிலும் மூன்று பேருக்கு மேற்படாமல் பங்குபற்றலாம்.
2) படிக்கும் பாடசாலை, ஆண்டு ஆகிய விபரங்கள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.
3) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி 'செயலாளர், யாழ். மா. கூ. சபை, இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
4) மேலதிக விபரங்களிற்கு அவ்வப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அல்லது பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம்,

(சி-9821) பதில் செயலாளர்.

---

## சகாயநிதி வழங்கப்பட்டது

யாழ்மாவட்ட சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மரண சகாய நிதிய திட்டத்தின் கீழ் அன்பளிப்பாக மூவாயிரம் ரூபா அண்மையில் மரணமான கிளைச் சங்க அங்கத்தவர் ஒருவரின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் சங்கானை கிளையைச் சேர்ந்த தொல்புரம் கிழக்கு கந்தர் முத்தையா என்ற சங்க அங்கத்தவரான மேசன் தொழிலாளியின் குடும்பத்தினருக்கு வட்டு சித்தன்கேணி அ.மி.த.க. பாடசாலையில் நடைபெற்ற கிளைச்சங்க பொது அங்கத்தவர்சந்திப்பின்போது தலைமைச் சங்கத் தலைவர் அ. அல்வின் அவர்களால் அன்பளிப்பு நிதியாக 3000 ரூபா வழங்கப்பட்டது. (41)

## கண்காட்சிப் போட்டி

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் விஞ்ஞான மன்றம் நடத்தும் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி இன்று முதல் புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகள் பலவும் பங்குபற்றும் இப்போட்டியை தினமும் காலை 8.30 முதல் மாலை 5.00 மணிவரை பார்வையிடமுடியும். இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக பேராசிரியர் நவரட்ணராசா கலந்து கொள்ளவுள்ளார்.

---

## நினைவு கூருகின்றோம் ... 20-06-1994

1987-ம் ஆண்டு இதே தினம் பூசாமுகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 04 தமிழிளைஞர்கள்.

உடுவிலில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன் மற்றும் பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஏழாலை-குரும்பசிட்டி,கட்டுவன் பகுதிகளைச் சேர்ந்த 03 தமிழர்கள்.

1989-ம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**வரதப்பா** (வைத்திலிங்கம் கணேசலிங்கம்-தண்ணீரூற்று, முள்ளியவளை-முல்லைத்தீவு)

அம்பாறை-அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர்போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவில் வட்டுவெளியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன். மற்றும் காரைதீவு இடம்பெயர்ந்தோர் முகாமினுள் நுழைந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

திருமலை - சீனன்குடாப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 16 தமிழர்கள்.

1990-ம் ஆண்டு காரைநகர்ப்பகுதியிற் சிறிலங்கா கடற்படையினர் சூட்டில் பலியான ஆதரவாளரான,

**செந்தில்வேல் மணிமாறன்** (தோப்பு, காரைநகர்)

1991-ம் ஆண்டு மணலாற்றில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**லெப்.சலீம்** (குமாரசிங்கம் ரவிச்சந்திரன் - சந்நைவீதி, கிரான்-மட்டு)

**2-ம் லெப்.காமன்** (பொன்னையா காசிநாதன்-கிண்ணியடி-மட்டு)

**செல்வா** (பொன்னம்பலம் விஜயன்-மாங்கேணி-மட்டு)

**கப்டன் சுபாஸ்** (அன்ரனிபோல் கென்றி சில்வெஸ்ரர் ஆனந்தன்-சிப்பித்திடல்- திருமலை)

**அண்ணாத்துரை** (ஐயம்பிள்ளை தவராசா-தம்பலகமம்-திருமலை)

சமர்க்களத்தில் முதன் முதலில் வீரச்சாவெய்திய துணைப்படைவீரர்கள்.

**லெப்.பொன்னம்பலம்** (- பொன்னம்பலம்-மணலாறு)

**2-ம் லெப்.சின்னப்பா-ரவிகாந்த்** (கனகராசா பிரபானந்தன்-கோண்டாவில் மேற்கு-யாழ்)

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**இந்திரன்** (அருளானந்தம் பரமானந்தம்-பாலமுனை-மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் (திருமலை நோப்பூர்) தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிறிலங்காக்கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழ்க் கடற்றொழிலாளர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9827)

---

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் நடாத்தப்படும்

# ★ கண்காட்சி கலைவிழா ★

இடம்:- கொத்தணி நடுவப் பணியகம் மானிப்பாய்.
காலம்;- 20 - 06 - 94 திங்கள்
21 - 06 - 94 செவ்வாய்
22 - 06 - 94 புதன்

★ காலை தொடக்கம் மாலை வரை ★
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-9837)

---

★ மரக்கறி வகைகள்
★ தகரத்திலடைத்த மீன் வகைகள்
★ பழங்கள்
★ சுத்திகரிப்பு பொருட்கள்
★ பால் மா வகைகள்
★ சமையற் பொருட்கள்

குறைந்த விலை - நிறைந்த சேவை
செழிப்புடன் மிளிரும்

## பசுஞ்சோலை

லெப். கேணல் இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-9835)

---

கூட்டுறவாளர்களே அணி திரள்க!

## விமானக் குண்டு வீச்சுக்கு எதிரான

## மாபெரும் கண்டன

# பேரணி

22 - 05 - 94 அன்று நீர்வேலியில் இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சைக் கண்டித்து கூட்டுறவாளர் நடத்தும் மாபெரும் கண்டன ஊர்வலத்தில் அனைத்து கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள் அனைவரும்.

பேரணியில் ஒன்று சேருவோம்
அநீதிக்கு எதிர்த்து குரல் கொடுப்போம்
சிங்களத் தடைகளை வெல்வோம்
சுதந்திர தமிழீழத்தை அமைப்போம்.

ஆரம்பமாகும் இடம்:- **யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபை முன்றல்**

காலம்:- **21-06-94 காலை 10 மணி**

செல்லும் பாதை:- யா. மா. கூ. சபை, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், கோயில் வீதி, செயலகம்.

— **கூட்டுறவாளர்கள்.**

(சி 9823)

# பொருளியல் A|L

## இலங்கையின் சமூக பொருளாதாரத் தரவுகள் - 1993

சென்ற வாரத் தொடர்ச்சி

### வரவு செலவுத்திட்டம்

#### அரசாங்கத்தின் வருமான அமைப்பு

(சதவீதங்களில்)

| வருமானவகை | 1993 அரசிறையில் | 1993 வரிஅரசிறையில் | 1993 மொ. உ. உற்பத்தியில் | 1994 அரசிறையில் | 1994 வரிஅரசிறையில் | 1994 மொஉ உற்பத்தியில் |
|---|---|---|---|---|---|---|
| 1. வருமான வரிகள் | 13.9 | 15.6 | 2.7 | 13.6 | 15.0 | 2.8 |
| 2. சொத்துக்கள்மீதான வரிகள் | 3.5 | 4.0 | 0.7 | 3.6 | 4.0 | 0.7 |
| 3. மத்திய வங்கியிடமுள்ள திறைசேரி உண்டியல் மீதான வரிகள் | 0.9 | 1 2 | 0.2 | 0.5 | 0.5 | 0.1 |
| நேர்வரி [1+2+3] | 18.7 | 20.8 | 3.6 | 17.7 | 19.5 | 3.6 |
| 4 பொருள்கள் பணிகள் மீதான உள்நாட்டு வரிகள் | 49.1 | 55.4 | 9.7 | 50.5 | 55.4 | 10.3 |
| (அ) மொத்தவிற்பனை வரி | 30.0 | 33.6 | 5.9 | 30.6 | 33.6 | 6.2 |
| (ஆ) கலால்வரி | 12.6 | 14.2 | 2.5 | 12.4 | 13.2 | 2.4 |
| (இ) பாதுகாப்பு வரி | 6.7 | 7.5 | 1.3 | 7.6 | 8.3 | 1.5 |
| (ஈ) உரிமைச் சான்றிதழ் வரிகள் | — | — | — | — | 0.3 | — |
| 5. சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 21.0 | 23.6 | 4.2 | 22.8 | 25.0 | 4.6 |
| (அ) இறக்குமதி வரி | 21.0 | 23 6 | 4.2 | 22.8 | 25.0 | 4.6 |
| (ஆ) ஏற்றுமதி வரி | — | — | — | — | — | — |
| நேரில்வரி [4+5] | 70.1 | 79.0 | 13.9 | 73.3 | 80.4 | 14.9 |
| 6. மொத்தவரி வருமானம் (1+2+3+4+5) | 88.6 | 100.0 | 17.6 | 91.0 | 100.0 | 18.5 |
| 7. வரியல்லாத வருமானம் | 11.4 | — | 2.3 | 9.0 | — | 1.8 |
| மொத்த அரசிறை [6+7] | 100 0 | — | 19.9 | 100.0 | — | 20.3 |

★ 1994 இல் மொத்தஅரசிறையில்;
1. வரி அரசிறை 91%
2. வரி அல்லாத அரசிறை 9%

★ வரி அரசிறையில்:
(அ) நேர்வரிகள் 20%
(ஆ) நேரில்வரிகள் 80%

1991 வினா:

அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தின் வரிவருமானத்தின் அமைப்பினைப் பற்றிச் சுருக்கமாக விவரிக்க.
அபிவிருத்தியடைந்த பொருளாதாரமொன்றிற் காணப்படும் அமைப்பிலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது?

1982 வினா:

(அ) அரசாங்கவருமானத்தில் வெளிநாட்டு வியாபார வரிகள் எவ்வளவுக்கு முக்கியமானவை?

(ஆ) அண்மை ஆண்டுகள்ல் சமூக அரசாங்க வருமானத்தில் வியாபாரப்புரள்வு வரியின் முக்கியத்துவம் யாது?

1983 வினா:

இலங்கை அரசவருமானம் சம்பந்தமாக உற்பத்தி, செலவு ஆகியவற்றின்மேலான வரிகளின் முக்கியத்துவம் யாது?

1985 வினா;

கடந்து சென்ற அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசவருமானத்தில் தெரிவுக்குரிய விற்பனை வரிகளின் சார்பளவிலான முக்கியத்துவம் என்ன?

குறிப்பு:-

மேற் காட்டப்பட்டது போன்ற வினாக்களுக்கு புள்ளி விபரத் தரவுகள்மூலமே விடையளிக்கப்பட வேண்டும்.

### அரசின் செலவு -பொருளாதாரப்பகுப்பு-1994

| | [மில். ரூபாவில்] |
|---|---|
| 1. நடைமுறைச்செலவு (அ + ஆ + இ) | 109368 |
| அ) பொருட்கள் பணிகள் மீதான செலவு | 47936 |
| ஆ) வட்டிக் கொடுப்பனவுகள் | 33862 |
| இ) நடைமுறை மாற்றல்கள் | 27570 |
| 2. மூலதனச் செலவு (அ + ஆ) | 35233 |
| அ) உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 20595 |
| ஆ) மூலதன மாற்றல்கள் | 14638 |
| 3. மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல் | 9619 |
| மொத்தச் செலவும் தேறிய கடன் வழங்கலும் (1 + 2 + 3, | 154220 |




★ 1994இல் மொத்தச் செலவில் :
1. நடைமுறைச் செலவு 73%
2. மூலதனச் செலவு 27%

★ நடைமுறைச் செலவில்:
அ) பொருட்கள் பணிகள் மீதான செலவு 51%
ஆ) வட்டிக்கொடுப்பனவு 29%
இ) நடைமுறைமாற்றல்கள் 20%

★ மூலதனச் செலவில்:
அ) உண்மைச் சொத்துக்களின் கையேற்பு 58%
ஆ) மூலதன மாற்றல்கள் 42%

1993 வினா:

அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தினது நடப்புச் செலவீடுகளின் சேர்க்கையினைப் பொருளியல் வகைப்படுத்தலைப் பயன்படுத்திச் சுருக்கமாக விளக்குக.

### வ. செ. திட்டப் பற்றாக்குறையும் நிதியீட்டமும் -1994

மில். ரூபாவில்

| | |
|---|---|
| நடைமுறைக் கணக்கு மிகை | 6267 |
| வ. செ. திட்டக்குறை (கொடைக்கு முன்) | - 38585 |
| ,, ,, ,, ( ,, ,, பின்) | - 30999 |
| நிதியீட்டம் | 30999 |
| 1. வெளிநாட்டுக் கடன்பாடு | 18241 |
| 2. உள்நாட்டுக் கடன்பாடு (அ + ஆ) | 12758 |
| அ) சந்தையல்லாக் ,, | — |
| ஆ) சந்தைக் ,, (i + ii) | 12758 |
| i) வங்கியல்லாக் ,, | 12758 |
| ii) வங்கிக் ,, | — |

★ 1993இல் மொத்தப் பற்றாக் குறையில்
வெளிநாட்டு மூலவளங்களின் பங்கு 45%
உள்நாட்டு ,, ,, 55%

வெளிநாட்டுக் கொடை

இலங்கைக்குக் கொடை வழங்கும் முக்கிய நாடுகள்:
1. யப்பான்
2. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இரண்டும் இலங்கைக்கான மொத்தக் கொடைகளில் 70% ஐ வழங்கின.

அரச படுகடன் பணிக்கொடுப்பனவு

1993இல் மொ. உ. உற்பத்தியின் சதவீதமாக:
அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுள் 11.3%

(தொடரும்)

அடுத்த வாரம்:
★ சென்மதி நிலுவை
★ வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான தரவுகள்.

# கணக்கியல் A/L

அலகு 4

கணக்கையும்' (Foreign Exchan e Reserve Account) அல்லது 'பொது ஒதுக்க க்கணக்கையும்' (Gen ral Reserve Account) ஏற்படுத்துவதற்காகவும் பயன்படலாம்.
மேற்குறித்த விடயங்களைப் பங்குதாரரும்

# இந்துநாகரிகம் A/L

ரம் அல்லது வேதாந்த சூத்திரம். கண்ணன் அர்ச்சுனனுக்கு பாரத யுத்தத்தின் தொடக்க நாளன்று உபதேசித்த உபதேசக்கருத்தின் தொகுப்பாகக் கொள்ளப்பட்ட பகவத்கீதை அதிய மூன்று இலக்கியங்க

# கணக்கியல் A/L

## அலகு 4

## ஏற்பாடுகளும் ஒதுக்கங்களும்
## Provision and Reserves

### 4. 0 அறிமுகம்:-

கணக்கியலில் ஏற்பாடுகள்; ஒதுக்கங்கள் என்பன முக்கியமான அம்சங்களாகும். எனினும் நடைமுறையிலும், பரீட்சை வினாத்தாள்களிலும் கூட இப்பதங்கள் தவறான முறையில் பிரயோகம் செய்யப்படுவதும், அதன் காரணமாக குறிப்பாக மாணவர்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்படுவதுமுண்டு. இக்கட்டுரைத் தொடரானது அத்தகைய குழப்பங்களை நிவர்த்தி செய்வதாக அமையும் என நம்புகின்றேன்.

### 4. 1 ஏற்பாடுகள் - Provisions

நிறுவனமொன்றினால் எதிர்கால நட்டங்களை ஈடு செய்வதற்காக லாபங்களிலிருந்து ஏற்படுத்தப்படுபவையாக ஏற்பாடுகள் இருக்கும். அதாவது, ப்திவழிக்கப்பட்ட தொகைகள் அல்லது தேய்மானமாக ஏற்படுத்தப்படும் தொகைகள் அல்லது சொத்துக்களின் பெறுமதியிலான குறைவு புதுப்பித்தல்களும் அல்லது உறுதியான முறையில் சரியாகப் பெறுமதியைத் Substantial Accuracy) தீர்மானிக்க முடியாத ஏதாவது அறியப்பட்ட பொறுப்புக்களின் மீது ஏற்படுத்தி வைத்திருக்கப்படுவது ஏற்பாடு எனப்படும்.

உதாரணம்-; தேய்மான ஏற்பாடு

ஐயக்கடன் ஏற்பாடு

### 4. 1. 1 ஏற்பாடுகள் - பொறுப்புகள்
### Provisions and Liablities

ஏற்பாடுகளும் பொறுப்புகளும் வேறுபட்டவைகளாகும் உறுதியான முறையில் சரியாகப் பெறுமதியைத் தீர்மானிக்க முடியாதவற்றுக்கானவையாக ஏற்பாடுகள் காணப்படும். ஆனால், பொறுப்புக்கள் என்பது உறுதியான முறையில் சரியாகப் பெறுமதியினைக் கணிப்பிடக் கூடியதான தொகைகளைக் குறிப்பதாக இருக்கும்.

உதாரணம்;-

நீதிமன்ற வழக்குகள் தொடர்பான சட்டச் செலவுகளின் (Legal Charges) சிட்டையை முற்கூட்டியே வழக்கறிஞர் வழங்குவதில்லை என்பதால் அச்சட்டச் செலவுகள் ''ஏற்பாடுகள்'' எனப்படும் ஆனால், ஓர் நிதியாண்டு முடிவில் சாதாரணமாகக் கணிப்பிடக்கூடிய அட்டுறு வாடகையானது ஓர் ''பொறுப்பு'' ஆகும்.

### 4. 2 வருமான ஒதுக்கங்கள்
### Revenue Reserves

காசுப் பங்குலாப நோக்கங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் இலாபநட்டப் பகிர்வு கணக்கில் வரவு வைக்கப்படுவதன் மூலம் இலாபத்திலிருந்து குறைக்கப்பட்டு ''ஒதுக்கக் கணக்கில்'' (Reserve Account செலவு வைக்கப்படுகின்ற தொகைகள் வருமான ஒதுக்கங்களாகும். இவ்வொதுக்கமானது குறித்த வேறு சில நோக்கங்களுக்கும் பயன்படுத்த முடியும். குறிப்பாக, அந்நியச் செலாவணியில் பெறுமதிக் குறைவுகள் (Devaluation) ஏற்படுவதால் நட்டங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் 'அந்நிய நாணய மாற்று ஒதுக்குக்

rve Account) ஏற்படுத்துவதற்காகவும் பயன்படலாம்.

மேற்குறித்த விடயங்களைப் பங்குதாரரும் அறிந்திருப்பார்கள் என்பதால், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கக் கூடியதான இலாபங்கள் முழுவதையும் பங்குலாபமாகப் பங்குதாரருக்குப் பகிர்ந்தளிப்பது சாதுரியமான செயல் அல்ல. குறித்த சில காலப் பிரிவுகளுக்காவது அவை இலாபந் தரக்கூடிய முறையில் புத்திசாதுரியமாக முதலிடப்படும் வளங்களாகப் பிரதிபலிக்கப்பட வேண்டும். இது எதிர்காலத்தில் இலாபநட்டப் பகிர்வு கணக்கில் இலாபங்களை அதிகரித்துக்காட்ட உதவுவதோடு, காசுப்பங்குலாபங்களுக்குப் பயன்படுந்தக் கூடியது எனவும்காட்டப்படும். இது சாதாரணமாக, குறித்த ஒதுக்கக் கணக்கில் Particular Reserve Account) வரவு வைக்கப்பட்டு இலாபநட்டப் பகிர்வு கணக்கில் செலவு வைக்கப்படுவதன் மூலம் செய்யப்படும்.


ஆக்கம் :

**S. K. பிரபாகரன்** B. B. A(Spl)

ஆசிரியர்: உடுவில் மகளிர் கல்லூரி


### 4.2.1 பொது ஒதுக்கீடு [General Reserve]

பணவீக்க விளைவுகளின் காரணமாகவே (Effect of Inflation) பொது ஒதுக்கம் முக்கியமாகத் தேவைப்படுகின்றது. உதாரணமாக, 1990-ல் நிறுவனமொன்றினது தொழிற்படு முதலாக 40,000/- காணப்படுகிறது. இத்தொகை அடுத்து வரும் மூன்று வருடங்களுக்குப் பேணப்படும். 1991-ல் விலை மட்டம் (Price Level) 25% ஆல் அதிகரிக்கின்றது எனக் கொண்டால் 1991-ல் தொழிற்படு முதல் 50,000/- தேவைப்படுகின்றது. இந் நிலையில் பொது ஒதுக்கம் இருந்திருப்பின் 10000 மேலதிக தொகையை ஈடு செய்திருக்க முடியும். ஆனால் இலாபம் முழுவதும் பங்கீடு செய்யப்பட்டிருப்பின் 40000 /- தொழிறபடு முதலைக் கொண்டே நிறுவனம் தொழிற்பட வேண்டியிருக்கும். எனவேதான், ''வருத்தப்படுவதை விட முன்னரே பாதுகாத்துக் கொள்வது மேலானது', என்ற தத்துவப்படி (A Philosophy of 'It's better to be safe than sorry) நிறுவனங்கள் முன் கூட்டியே இலாபங்களிலிருந்து பொது ஒதுக்கத்தை உருவாக்குவதன் மூலம் பணவீக்கம் போன்றவை காரணமாக ஏற்படும் நெருக்கடிகளை நிறுவனங்கள் எளிதாக சமாளித்துக் கொள்ள முடிகின்றது. ஆனால், நிறுவனங்கள் தேவைக்கதிகமாக பொது ஒதுக்கீட்டை உருவாக்குவதும் விரும்பத்தக்கது அல்ல. ஏனெனில் அதனால் மிகையான திரவநிதி ஏற்பட்டு அது தவறாகப் பயன்படுத்தப்படக் கூடும். அதனை விட: அவற்றைப் பங்குதாரருக்கு வழங்கீடு செய்திருப்பின், அவர்கள் அதனைப் பயன்தரு விதமாகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்திருக்கும்.

### 4.2.2 பங்குலாபம் சமப்படுத்தும் நிதியம்
### Dividend Equalisation Reserves

கம்பனிகளால் வருடாந்தம் வழங்கப்படும் பங்குலாபங்களில் தளம்பல் நிலைமை காணப்படுதல் விரும்பத்தக்கதல்ல. ஏனெனில் அந்நிலை பங்குதாரர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துவதுடன் கம்பனிகளின் உறுதியற்ற நிலையையும் வெளிப்படுத்தும் என்பதால் அந்நிலைமைகள் கம்பனியினது நன்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இந்துநாகரிகம் A/L

## உபநிஷதங்களின் சிறப்பியல்புகளும் அவை விளங்க வைக்கும் முக்கிய தத்துவக் கொள்கைகளும்

இந்து மதத்தின் மூல இலக்கியமாகவும் இந்திய நாட்டின் முதல் இலக்கியமாகவும் கொள்ளப்படும் தனிச்சிறப்பு வேதங்கள் எனும் இலக்கியத்திற்கே உரியனவாகும். வித்தைகளைக் கொண்டமைந்ததாகவும் அறிவுப் பொக்கிஷமாகவும் கருத்துக்கொள்ளப்படும் இவ்வேத இலக்கியங்கள் கொண்டமைந்த உட்பொருள் அமைவுகளை ஆதாரமாகக்கொண்டு அதன் முற்பகுதியைக் கர்மகாண்டப் பகுதியெனவும் பிற்பகுதியை ஞான காண்டப் பகுதியெனவும் வகைப்படுத்திக் கூறுவர். அங்ஙனம் வேதங்களின் ஞான காண்டப் பரப்பில் அமைவு பெற்றுள்ள பகுதிகளில் முக்கியத்துவமான கருத்துத் தொகுப்பாக அமைவு பெற்ற ஞானக்கருத்துக்களை கொண்டமைந்த பகுதியையேஉபநிஷதங்கள் என்ற பெயரினால்வழங்குவர்.

மந்திரம், பிராமணம், ஆரணியம், உபநிஷதம் என வேதங்களின் பகுதிகளில் இறுதிப் பகுதியிலே அமைவு பெற்றமையைக் காரணமாகக் கொண்டு வேதாந்தம் மறைமுடிபு என்ற பெயர் கொண்டழைக்கப்படுவதாகிய இவ் உபநிஷதங்கள் வேதங்களின் ஏனைய பகுதிகள் யாவற்றிலும் தலையாய சிறந்த கருத்துக்களை தருவதனை நோக்கமாகக் கொண்டு வேத சிரசு என வழங்கப்படுகின்றது. இதில் உள்ளடக்கப்பட்ட கருத்துக்கள் ஆன்மீக நிலையில் உயர்ந்த பக்குவநிலை பெற்ற ஞான அறிவாளர்களாகத் திகழ்ந்த குருவினர் அதே நிலையை அடையக் கூடிய சிஷ்யர்களை தமக்கு அண்மையிலே அமர்ந்திருக்க வைத்து அவர்களுக்கு விளக்கிய ஞானக்கருத்துக்களை கொண்டமைந்தமையால் ''நெருங்கி அமர்ந்திருந்து கேட்கப்பட்டது'' எனும் பொருளில் இது உபநிஷதம் என்ற பெயரைப் பெற்றுக் கொண்டது எனலாம்.

குருவிற்கும்சிஷ்யனுக்குமிடையிலே நடைபெற்றதாகிய உரையாடல் தொகுப்பாக எண்ணிறைந்த உபநிஷதங்கள் எழுந்தன எனக் கொள்ளப்பட்டாலும் இறுதியாக எழுந்தது எனக்கொள்ளப்படும்'முத்திக்கோ உபநிஷதம்' 108 உபநிஷதங்களின் பெயர்களை குறிப்பிடுவதனால் தெளிவான உபநிஷதங்களாக 108 உபநிஷதங்கள் காணப்படுகின்றன எனக்கருத்துக் கூறப்படுகின்றன. இவற்றுள் சிறந்த கருத்துக்களை தத்துவார்த்த அடிப்படையோடு தந்துள்ள உபநிஷதங்கள் எனும் சிறப்பை 10உபநிஷதங்கள் பெற்றுள்ளன.

இங்ஙனமாக எழுந்த இவ் உபநிஷதங்களிற்குரிய சிறப்பியல்புகள் எவை என்பதனையும் அவை கொண்டுள்ள முக்கியத்துவமான தத்துவக்கொள்கைகள் யாவை என்பதனையும்சுருக்கமாகநோக்குவோம்.

இந்து மதத்தில் அன்றிலிருந்து இன்றைய வரை அம்மதம் சார்பான கருத்துக்களை விளங்க வைக்கும் நோக்கில் பல்வேறுபட்ட இலக்கியங்கள் எழுச்சி பெற்றுள்ளன. அங்ஙனம்எழுச்சிபெற்றஇலக்கியங்களில் பிரதானமான சிறப்பிற்குரிய இலக்கியங்கள்என்கின்ற வரிசையில் ''பிரஸ்தான திரயங்கள்'' என மூன்று நூல்கள் சுட்டப்படுகின்றன. அவையாவன: உபநிஷதம். இவ் உபநிஷதங்களை சுருக்க வடிவமைப்பில் தர எழுந்த பாதராயணரின் பிரமசூத்தி

தேசித்த உபதேசக்கருத்தின் தொகுப்பாகக் கொள்ளப்பட்ட பகவத்கீதை ஆகிய மூன்று இலக்கியங்களையும் குறிப்பிடுவர். பிற்கூறப்பட்ட பிரமசூத்திரம், பகவத்கீதை என்பன உபநிஷதத்துடன் மிகவும் நெருக்கமுடையவையாகும். விரிந்த உபநிஷதக் கருத்துக்களை பிரமசூத்திரத்தில் இரத்தின சுருக்கமாக காண்கின்றோம், அதேசமயம் பகவத்கீதையில் அதுதெளிவுபடுத்தப்பட்டிருக்க காண்கின்றோம். பகவத்கீதை, உபநிஷதம் என்ற பழத்திலே பிழிந்து எடுக்கப்பட்ட சாராம்சம் என்றும் உபநிஷதம் என்ற பசுவிலே கறந்தெடுக்கப்பட்ட பால் என்றும் கூறுமளவிற்கு உபநிஷதத்தின் சாரமாக அமைந்துள்ளது என்றால் ப்ரஸ்தானதிரயம் எனச் சுட்டப்பட்ட நூல்களில்தலையாயசிறப்பிற்குரிய இலக்கியமாக உபநிஷதங்களையே கருத்துக் கொள்ள முடிகின்றது.

இவ் உபநிஷதங்கள் சாதாரண நிலையாளர்களால் விளங்கவைக்கப்பட்ட சாதாரண கருத்துக்களை கொண்டமைந்ததல்ல. ஆன்மீக அறிவாளர்களின் சிந்தனையில் உதயமாகிய அறிவு பூர்வமான ஆழ்ந்த ஆராய்வின் முடிவாகும். ஆகவே இறை, உலகம், உயிர் என்னும் முப்பொருள் பற்றிய ஆழமான ஆராய்ச்சியையும் ஆராய்ச்சி முடிவையும் முக்கிய கருத்துக் கொள்கையாக வெளிப்படுத்தியமையால் இது தத்துவ இலக்கியமாகச் சிறப்பிக்கப்படுகிறது மட்டுமன்றி இந்துமதத்தின் மூல தத்துவம் என்னும் சிறப்பும் உபநிஷதங்களுக்கே உரியதாகின்றது.

---

க. பொ. த. [உயர்தரம்] இந்துநாகரிகம்

பாடத்திட்ட அமைவின்படி பகுதி II -ல் ''உபநிஷதம்'' என்ற தலைப்பு முக்கியத்துவமுடையதாகும். இதனை நோக்கமாகக் கொண்டு,

''உபநிஷதத்தின் சிறப்பியல்புகளும் அவை விளங்க வைக்கும் முக்கிய தத்துவக் கொள்கைகளும்''

என்ற தலைப்பில் இக்கட்டுரை அமைவு பெறுகின்றது.

6 வினாக்களுக்கு 3 மணித்தியாலயங்களில் விடையளிக்க வேண்டிய தேவை பரீட்சார்த்திகளுக்கு இருப்பதனால் 1 வினாவிற்கு 30 நிமிடங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டியுள்ளமையால் இதனைக் கவனத்திற் கொண்டு மிகச் சுருக்கமான வகையில் கட்டுரை அமைவு பெற்றுள்ளது.


தொகுப்பு:

**அருள்நங்கை சண்முகநாதன்**


---

இந்து மதத்தின் முதற் தத்துவமாக எழுந்த இந்த உபநிஷதங்களே அனைத்து இந்தியத் தத்துவங்களின் எழுச்சிக்கும் முன்னோடியாக விளங்கியது எனலாம். அதாவது வைதிக தத்துவங்களாக எழுந்த தரிசனங்கள் எனச் சிறப்பிக்கப்படும் சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வ, உத்தர மீமாம்சைக் கருத்துக்கள் சங்கர, இராமானுஜ மத்துவவேதாந்தக் கருத்துக்கள் எனப்படும் அத்வைதம், விசிஷ்ட அத்வைதம், துவைதம் எனும் கருத்துக் கொள்கைகள் சைவசித்தாந்தக்கொள்கைகள் என்பனவும் அவைதிகத்த்துவங்களாகிய உலகாயுதம் சமண பௌத்த தத்துவக்கருத்துக்கள் எழுதற்கான மூல ஊற்றாக அடிப்படை

(4ஆம் பக்கம் பார்க்க)

# தாவரவியல் A/L

## தாவர இராச்சியப் பிரிவுகள் பற்றிய ஒரு பரீட்சை நோக்கு . . . .

தாவர இராச்சியப் பிரிவுகள் எனப்படுகின்ற தாழ்தாவரங்களின் பதிய அமைப்புக்கள், இனப்பெருக்கம். பூக்கும் தாவரங்களின் இனப்பெருக்கம் என்பவற்றை உள்ளடக்கிய பாடப்பரப்பில் ஆழமானதாக ஆனால் மாணவர்களினது அறிவை நன்கு வெளிப்படுத்தக்கூடிய வகையில் அடக்கமான வினாக்கள் பகுதி I இலும், பகுதி II இலும் தயாரிக்கப்படுகின்றன

இப்பாடப் பரப்பிற்குரிய வினாக்கள் வெவ்வேறு பாட அலகுகளையும் தொடர்புபடுத்திக் கேட்கப்படுகின்றன. முக்கியமாக பாகுபாடு, நுண்ணுயிரினவியல், சூழலியல் உடற்றொழிலியல் ஆகியன வெவ்வேறு வகையில் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான விடயங்களை மையமாக வைத்து உருவாக்கப்படும் வினாக்கள் பின்வரும் அடிப்படைகளைப் பிரதானமாகக் கொண்டவையாகும்.

(அ) பாகுபாடும், பெயரிடுதலும் பற்றிய தெளிவான எண்ணக்கருவை கொண்டிருத்தல்.

(ஆ) நுண்ணங்கிகளாகக் காணப்படுகின்ற அங்கிகளின் நடத்தைகள், பதிய உடலமைப்பு, இனப்பெருக்க நிலைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.

(இ) முளையத்தை உருவாக்கும் தாவரங்களில் காணப்படுகின்ற சந்ததிகளின் பரிவிருத்தி பற்றிய தெளிவான அறிவைக் கொண்டிருத்தல், அத்தாவரங்களின் பதிய அமைப்பு இனப்பெருக்கம் தொடர்பான விடயங்களை அறிந்திருத்தல்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் எவ்வாறு பரீட்சிக்கப்படுகின்றன என்பதனை வெவ்வேறு வினாக்களின் உதவியுடன் விபரமாக ஆராய்வோம். இதற்கு சில கடந்தகால பரீட்சை வினாக்களை உதாரணமாக எடுப்போம்.

உதாரணம் (1) **1986 Aug.** பல்தேர்வு வினா

பச்சையவுருவங்கள், இழைமணிகள், இரைபோசோம்கள் ஆகிய அனைத்தும் எவற்றில் காணப்படுகின்றன?

விடை:

(i) *Lyngbya* விலும், *Chlamydomonas* இலும்
(ii) *Mucor* இலும் *Spirogyra* விலும்
(iii) *Pinularia* விலும் *Saccharomyces* இலும்
(iv) சோளத்தாவர இலையின் வேலிக்காற் புடைக்கல விழையக்கலங்களிலும் இனம் வித்து மூடியுளித் தாவர வேரின் அகத்தோற் கலங்களிலும்.
(v) *Spirogyra* வினதும் *Nephrolepis* இனதும் பிரிவிலி முதல்களிலும்

இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு விடையிலுமுள்ள அமைப்புக்களைத் தெளிவாக அவதானித்து பொருத்தமான அமைப்பைத் தெரிவு செய்ய வேண்டும்.

0 முதலாவது விடையிலுள்ள *Lyngbya* புரோக்கரியோற்றாவுக்குரியது ஆகவே பச்சையவுருவங்கள் இழைமணிகள் என்பன அவற்றில் காணப்படுவதில்லை எனவே முதலாவது விடை பொருத்தமற்றது.

0 இரண்டாவது விடையிலுள்ள *Mucor* உம் மூன்றாவது விடையிலுள்ள *Saccharomyces.* உ-ம் பங்கசுக்களாகும் இவை பிறபோசணைக்குரியவை பச்சையவுருவங்களைக் கொண்டிருக்க மாட்டாதவை. நான்காவது விடையில் சோளத்தின் வேரில் பச்சையவுருமணிகள் காணப்படுவதுமில்லை. ஆகவே இவ்விடையும் பொருத்தமற்றது ஐந்தாவது விடையிலுள்ள *Spirogyra* வின் இழையிலும் *Nephrolepis* இன் புணரித்தாவரத்திலும் இம்மூன்று அமைப்புகளுமுண்டு.

எனவே ஐந்தாவது விடை பொருத்தமானது.

உதாரணம் 2] **1989 AUG**

பின்வருவனவற்றுள் எதில் பச்சையம் காணப்படுவ

இன் வித்தித்தாவரம் *Cycas* இன் சூல்வித்து வித்து மூடியுளியின் ஆண் புணரித்தாவரம்.

iv) *Pogonatum* இன் ஆண் புணரித்தாவரம், *Nephrolepis,* இன் பிரிவிலி முதல் *Cycas* இன் பெண்புணரித்தாவரம் வித்துமூடியுளியின் ஆண்புணரித்தாவரம்

v) *Marchantia* இன் பிரிவிலி, *Selaginella* இன் வித்தித்தாவரம் *Cycas* இன் ஆண்புணரித்தாவரம் வித்துமூடியுளியின் ஆண்புணரித்தாவரம்

இவ்வினாத்தொடர்பாக மாணவர்கள் பாகுபாடு பற்றிய அறிவையும் சந்ததிபரிவிருத்தி பற்றிய அறிவையும் கொண்டிருத்தல் அவசியமாகின்றது

அதாவது தலோபிற்றாத்தாவரங்கள் ஒரு பொழுதும் காழ் இழையத்தை கொண்டிருப்பதில்லை மூளையம் கொள்ளும் தாவரங்களில் (Embryophyta) பிறையோனபற்றாக்களில் (Bryophyta) காழ் காணப்படமாட்டாது திறக்கியோ பீற்றாக்குள் (Tracheo Phyta) அடங்கும் தாவரங்கள் மாத்திரமே காழ்இழையத்தை கொண்டிருக்கும்.

திறக்கியோபிற்றாக்களிலும் ஆட்சியாகக் காணப்படுகின்ற வித்தித்தாவரப் பகுதிகளில் மாத்திரமே காழ் இழையம் காணப்படலாம் ஒடுக்கப்பட்டுள்ள புணரித்தாவரச் சந்ததிகளில் காழ் காணப்படுவதில்லை

இவ்விளக்கங்களை சுருக்கமாக கருத்திற்கொண்டு இவ்வினாவுக்கு விடையளிக்கும்போது நான்காவது விடையே மிகவும் சரியானதாகும் மற்றைய நான்கு விடைகளும் பொருத்தமற்றதாக காணப்படுவதற்கான காரணத்தை மாணவர்கள் இலகுவாக துணியவேண்டும்.

உதாரணம் நான்கு. **1991 Aug** (1992 Sp)

வித்தித்தாவரங்கள் யாவும்

(1) ஒத்தவித்தியுள்ளவையும், வித்தித்தாவரத்தில் தங்கு தன்மையுடைய புணரித் தாவரங்களைக் கொண்டவையுமாகும்.
(2) ஒத்தவித்திபுள்ளவையும், சுயாதீனமான புணரித்தாவரங்களைக் கொண்டவையுமாகும்.
(3) பல்லினவித்தியுள்ளவையும், வித்தித் தாவரத்தில் தங்கு தன்மையுள்ள புணரித்தாவரங்களைக் கொண்டவையுமாகும்.
(4) பல்லின வித்தியுள்ளவையும், வித்தித்தாவரத்தில் தங்கும் தன்மையுள்ள பெண்புணிரித் தாவரங்களையும் சுயாதீனமான புணரித்தாவரங்களையும் கொண்டவையுமாகும்.
(5) ஒத்தவித்தியுள்ள அல்லது பல்லினவித்தியுள்ளவையும், வித்தித்தாவரத்தில் தங்கு தன்மையுடைய அல்லது சுயாதீனமான புணரித்தாவரங்களைக் கொண்டவையுமாகும்.

இவ்வினாவில் இரண்டு அம்சங்கள் காணப்படுகின்றன.

A] பொதுமைப்பாடெய்திய ஒரு சொற்றொடரின் கீழ் ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன இவ்விடைகளை நன்கு வாசிக்கும்போது நான்கு விடைகள் பிழையாகவும் ஒன்று மாத்திரம் சரியானதாகவும் காணப்படும். சரியான விடையே தரப்பட்ட வினாவிற்கு பொருத்தமானதாக அமையும்

அல்லது

நான்கு விடைகள் சரியாகவும் ஒன்று மாத்திரம் பிழையானதாகவும் காணப்படின் பிழையான விடையே தரப்பட்ட வினாவிற்கு பொருத்தமாக அமையும்.

( ) சந்ததிப்பரிவிருத்திபற்றியும் வித்திகளின் உருவம் பற்றியும் அறிந்திருத்தல்

*Marchantia*, *Pogonatum* போன்றவற்றில் சுயாதீன வாழ்வுள்ள புணரித்தாவரமும், (தங்கும் தன்மையுள்ள) ஒட்டுண்ணி வாழ்வுள்ள வித்தித்தாவரமும் உண்டு அத்துடன் உருவாக்கப்படும் வித்திகள் ஒத்தவித்தியுள்ளவையாகும்.

*Nephrolepis* இல் சுயாதீன வாழ்வுள்ள புணரித்தாவரமும் வித்தித்தாவரமும் உண்டு. ஆனால் வித்தித்

# கணக்கியல்

மதிப்பைப் பாதிப்பதாக அமையும். எனவே, கம்பனிகள் பங்குலாபத் தளம்பல்களைக் கட்டுப்படுத்த பெருந்தொகை இலாபம் உழைக்கப்படும்காலப்பகுதிகளில இலாபங்களிலிருந்து ஓர் ஒதுக்கினை உருவாக்கி இலாபம் குறைவடைகின்ற காலங்களில் பங்குலாபக் குறைவுகள் அவ்வொதுக்கிலிருந்து ஈடு செய்யப்படும். அவ்வாறான ஒதுக்கமே பங்குலாபஞ் சமப்படுத்தும் நிதியமாகும்.

**4.3 மூலதன ஒதுக்கங்கள் Capital Reserves**

இலாப நட்டப் பகிர்வு கணக்குக்கு மாற்றி காசுப் பங்குலாப நோக்கங்களுக்காக மாற்றீடு செய்யப்பட முடியாத ஒதுக்குகளே மூலதன ஒதுக்கங்களாகும். இங்கு காசுப் பங்குலாபங்கள் எனக் குறிப்பிடப்படுவதன் நோக்கம் யாதெனில், மூலதன ஒதுக்கங்கள் பின்னர் காசு அல்லாப் பங்குலாபங்களுக்காக (Non -cash dividend) உபகாரப் பங்குகளாக வழங்கப்படக் கூடியதாக இருப்பதே ஆகும்

மூலதன ஒதுக்கங்களுக்கான உதாரணம்;-

a) மூலதன மீட்பு ஒதுக்கு நிதி
b) பங்கு வட்டக் கணக்கு
c) மீள் மதிப்பீட்டு ஒதுக்கக் க-கு
d) உருவாக்கலுக்கு முன்பான இலாபங்கள்

**4.3.1 மூலதன மீட்பு ஒதுக்கு நிதி Capital Redemption Reserve Fund**

கம்பனிகள் மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளின் மீட்பு நீதிக்காக அதனது இலாபங்களைப் பயன்படுத்துகின்றபோது, மீட்கப்படும் பங்குகளின் பெயரளவுப் பெறுமதிக்குச் சமமாக ''மூலதன மீட்பு ஒதுக்கு நிதியம்'' ஒன்றை உருவாக்கப்பட வேண்டுமெனவும், இதுவோர் இறுத்த பங்கு முதலுக்கு ஒப்பானதென்றும் 1982-ம் ஆண்டின் கம்பனிகள் சட்டம் குறிப்பிடுகின்றது. ஆதலால், இதுவோர்'' சட்டத்தின் படைப்பாக''க் கருதப்படுகின்றது. இவ்வாறு உருவாக்கப்படும் 'மூலதன மீட்பு ஒதுக்கு நிதி', பின்னர் உபகாரப் பங்கு வழங்கலுக்கும் மூலதனக் குறைப்புக்கும் பயன்படுத்தப்படக்கூடியதாக இருக்கும். இவ்வொதுக்கம் 1981க்குப் பின் இங்கிலாந்தில் 'மூலதன மீட்பு ஒதுக்கு'' (C. R. R) என்றே அழைக்கப்படுகின்றது.

**4.3.2 பங்குவட்டக் கணக்கு Share Premium Account**

கம்பனிகள் பங்குகளை முகவிலையினைவிடக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் போது மேலதிகமாகப் பெறப்படும் விலை பங்கு வட்டமாகும் இதுவோர் மூலதன ஒதுக்கமாகும்.

உதாரணம்:-

10/-முகவிலையுடைய பங்கொன்று 13/-ற்கு விற்கப்படின் 3/-பங்குவட்டமாகும்

கம்பனிகள் சட்டத்தின்படி பங்குவட்டக் கணக்கு மீதியானது பின்வரும் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட முடியும்:

(அ) தொடக்கச் செலவுகள் போன்ற கற்பனைச் சொத்துக்களின் பதிவழிப்பிற்கு.
(ஆ) உபகாரப் பங்கு வழங்கலுக்கு
(இ) மூலதனக் குறைப்புக்கு
(ஈ) மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளின்போது ஏற்படும் மிகைவிலையைப் பதிவழிப்பதற்கு

பங்கு வட்டமானது பிரதானமாகப் பின்வரும் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படக்கூடாது

(அ) நன்மதிப்பைப் பதிவழிப்பதற்கு
(ஆ) பங்குலாபமாகப் பகிர்வதற்கு

**4.3.3 உருவாக்கலுக்கு முன்பான இலாபங்கள் Profits Prior to Incorporation**

கம்பனி ஒன்று சட்ட ரீதியாகக் கூட்டிணைக்கப்படுவதற்கு முன் ஏற்படும் செயற்பாடுகளினால் எழும் இலாபங்களே உருவாக்கலுக்கு முன்பான இலாபங்களாகும். இவையும் ஓர் மூலதன ஒதுக்கமே என்பதால் இவை உபகாரப் பங்கு வழங்கலுக்கும், நன்மதிப்பைப் பதிவழிப்பதற்கும், பகுதியாக இறுக்கப்பட்ட பங்குகளை முற்றும் இறுத்தவையாக மாற்றுவதற்கும்பயன்படுத்தப்படலாம்.

**4.4 இரகசிய ஒதுக்கம் | மறைவொதுக்கம் Secret Reserve - Hidden Reserve**

ஓர் ஐந்தொகையின் மூலம் வெளிப்படுத்தப்ப

(உ) கம்பனிகள் மறைவொதுக்கங்களைப் பேணுவது தெரியவரின் கம்பனியினது நன்மதிப்பு பாதிக்கப்படும்

திருத்தம்:-

சென்றவார கணக்கியல் தொடரில் 3.2 பகுதி 'ஆ' வில் மேலதிக நிறுவுதல் செலவுகள் 6300/- என்பது 4000/- என திருத்திக் கொள்ளப்பட வேண்டும். அ-து, விற்ற பொறியின் கிரயம் 36000 + 4000 + 4400 44400 ஆக வரும்.

# இந்துநாகரிகம்

ஆதாரங்களாக இந்த உபநிஷதங்களே விளங்கின என்பதனை அவ்வத்தத்துவங்களை ஆராயின் அறிய முடிகின்றது. ஆகையால் அனைத்து இந்திய தத்துவ எழுச்சிக்கும் ஆதாரமாகிய சிறப்பு உபநிஷதங்களுக்குரியதேயாகும்.

சிறப்பாக சைவத்தின் தெளிந்த முடிவு அல்லது முடிந்த முடிவு எனக் கொள்ளப்பட்ட ''சைவசித்தாந்தம்'' வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் என்றே சிறப்புப்படுத்தப்படுகின்றது இதனை சைவசித்தாந்த சாஸ்திர நூல்களில் ஒன்றாகிய உமாபதியின் சிவப்பிரகாசநூற் கூற்று உறுதிப்படுத்துகின்றது '' . . . வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்த திறனிங்குத் தெரிக்கலுற்றாம்'' என்பதாகும். இதனைப் பொருள் கொண்டோர் வேதத்தின் இறுதிப் பரப்பில் எழுந்ததாகிய வேதாந்தம் என்ற சுட்டில் அழைக்கப்பட்ட உபநிஷதங்களின் தெளிவே சைவசித்தாந்தக் கருத்துக்கள் எனவும் வேதாந்தக் கொள்கைகளாகிய சங்கர, இராமானுஜ, மத்துவ வேதாந்தங்கள் உபநிஷதத்தை மூலாதாரமாகக் கொண்டு கருத்துக்களைவழங்கியிருப்பினும் கருத்து ரீதியாக அவை கொண்ட முரண்பாடுகள் ஏற்படுத்திய குழப்ப நிலையை நீக்கி அவ்வேதாந்தக் கொள்கைகளுக்குரிய தெளிவை தரும் நோக்கில் எழுந்ததே சித்தாந்தம் எனவும் கருத்துக் கொள்ளப்பட்டமையால் எக்கருத்தாயினும் சித்தாந்தம் எனும் இந்துதத்துவத்தின் தெளிவான முடிவிற்கான அடிப்படைக் கருத்தை இவ் உபநிஷதங்களே வழங்கியிருந்ததால் தத்துவ வரலாற்றில் தனிச்சிறப்புப் பெறும் இலக்கியமாக உபநிஷதங்களைக் குறிப்பிட முடிகிறது.

தத்துவக் கருத்துக்களை மட்டுமே கொண்டுள்ளது என உபநிஷதங்களை கொள்ள முடியாத அளவிற்கு சமயக் கருத்துக்களின் மூலச் சுவடுகளாகவும் இவ் உபநிஷதங்கள் அமைந்துள்ளமை இவ்விலக்கியத்தின் மதிப்பினை உயர்த்துகின்றது. அதாவது பிற்காலம் சங்கராச்சாரியார் ஸ்தாபித்த 6 வகைச் சமயப்பிரிவுகளின் கருத்துக் கொள்கைக்கான மூலக்கருத்துக்கள் உபநிஷதங்களில் காணப்படுகின்றன. விஷ்ணுவைப் போற்றும் வைஷ்ணவ உபநிஷதங்கள் சிவனைப் பரம் பொருளாக ஏற்றிக் கூறும் சைவ உபநிஷதங்கள் சக்தியே பிரமம் எனக் கூறும் சாக்த உபநிஷதங்கள் என அறுவகை சமயப் பிரிவுகளின் தனித் தெய்வங்களை மகிமைப்படுத்தும் உபநிஷதங்கள் காணப்படுவதனால் பிற்கால சமயப் பிரிவுகளின் எழுச்சிக்கான மூலக் கருத்துக்களை வழங்கிய சிறப்பும் இவ் உபநிஷதங்களிற்குரியதாகிறது.

தத்துவம், சமயம் எனும் கொள்கைகளுக்கு முதன்மை கொடுத்து எழுந்த இவ் உபநிஷதங்கள் சமுதாய வாழ்வின் வழிகாட்டிகள் எனக் கூறும் வகையில் சமூக வாழ்க்கைக்குரிய ஒழுக்கவியல் கருத்துக்களையும் நிறைவாக தந்திருக்கக் காண்கிறோம். இதிகாசங்கள் கதைகளாக தர்ம நெறியை புகட்டின. தர்மசாஸ்திரங்கள் கட்டாயம் ஆற்றப்படவேண்டிய கடப்பாடுகளாக தர்மநெறியை வழங்கின. ஆகவே தர்மநெறி வாழ்க்கையின் அவசியப்பாட்டை பின்வந்த இலக்கியங்கள் பேணுதற்குரிய அடிப்படைக் கருத்துக்களை உபநிஷதங்களில் காணமுடிந்தது. ஒரு மனிதனாக நிறைமனிதனாக இவ்வுலகிலே வாழவைத்து அந்த நிறை வாழ்வின் வழிபதாக இறைநிலையடைய வைத்ததற்குரிய வழிகாட்டியாக இவ் உபநிஷதங்கள் தந்த ஒழுக்கவியல் கருத்துக்கள் அமைந்துள்ளன ''மெய்மை, வாய்மை, தூய்மை எனும் சத்தியத்தைக் கடைப்பிடிப்பவன்தான் முடிவில் மேன்மையடைவான்'' என முண்டக உபநிஷதம் கூறும் கருத்தானது சமூக ஒழுக்கத்தை முக்கியத்துவப் படுத்தும் கருத்துக்களை கூறுவதாகவும் இவ் உபநிஷதங்களை சிறப்பிக்க முடிகின்றது.

ஏறத்தாழ கி. மு6ஆம் நூற்றாண்டு காலமள

ன்வருவனவற்றுள் எதில் பச்சையம் காணப்படுவ இல்லை?

i) Nephrloepis இன் புணரித்தாவரம்
ii) Poganatum இன் புணரித்தாவரம்
iii) Cycas இன் பெண் புணரித்தாவரம்
iv) Nepenthes இன் கெண்டி
v) Ulva இன் புணரித்தாவரம்

இங்கு Nephrolepis, Poganctum, Ulva என்பவற்றின் புணரித்தாவரங்கள் சுயாதீன வாழ்வுக்குரியவை அதாவது ஒளித்தொகுப்பு செய்யக் கூடியன. ஆகவே பச்சையத்தைக் கொண்டிருக்கும் அதே போல Nepenthes இன் கெண்டியும் ஒளித்தொகுப்பு செய்வதனால்பச்சையத்தைக்கொண்டிருக்கும்ஆனால் Cycas இன் பெண் புணரித்தாவரம் ஒட்டுண்ணி வாழ்வுக்குரியன (பிறபோசனை) பச்சையத்தைக் கொண்டிருப்பதில்லை.

உதாரணம் 3 1989 AUG

காழ் பின்வரும் தொகுதிகளுள் எதில் காணப்படமாட்டாது?

i) Agaricus இன் கனியுடலம் Poganatum இன் வித்தித்தாவரம் Nephrolepis இன் இலை Oryza வின் நாற்று
ii) Ulva இன் பிரிவிலி Nephrolepis இன் பிரிவிலி முதல் Nephrolepis இன் வித்தித்தாவரம் Cycacs இன் நுண்வித்தியில்.
iii) Poganotum இன் வித்தித்தாவரம் Nephrolepis

Nephrolepis இல் சுயாதீன வாழ்வுள்ள புணரித்தாவரமும் வித்தித்தாவரமும் உண்டு. ஆனால் வித்தித்தாவர சந்ததியே ஆட்சியான வாழ்வுக்குரியது. அத்துடன் உருவாகும் வித்திகள் ஒத்தவித்தியுள்ளவை Selaginella CYcas வித்துமூடியுளித் தாவரங்கள்என்பனவற்றில் சுயாதீன வாழ்வுள்ள வித்தித்தாவர சந்ததியும், ஒட்டுண்ணி வாழ்வுள்ள. புணரித்தாவர சந்ததியும் காணப்படுகின்றது அத்துடன் இவற்றில் பல்லின வித்தியுண்மை காணப்படுகின்றது.

தரப்பட்ட வினாக்களை அடிப்படையாக வைத்துஉதாரணம்நான்கின் வினாவுக்குவிடையளிக்க முயலும் மாணவர்கள் **Ulva. Cladophora, Poganatum Nephrolepis Selaginella Cycas** வித்துமூடியுளி என்பவற்றிலுள்ள சந்ததிப்பரிவிருத்தி பற்றிய தெளிவான அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும் இதிலிருந்து வித்தித்தாவரங்கள் பற்றிய சரியான விடைபின்வருமாறு அமையும் வித்தித்தாவரங்கள் ஒத்த வித்தியுள்ள அல்லது பல்லின வித்தியுள்ளவையும் தன்னில் தங்கும் தன்மையுடைய அல்லது சுயாதீனமான புணரித்தாவரங்களைக் கொண்டவையாகும்.

(தொடரும்)


**சுப்பிரமணியம் செல்வநேசன்**

ஆசிரியர்
சென்பற்றிக்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.


**Secret Reserve - Hidden Reserve**

ஓர் ஐந்தொகையின் மூலம் வெளிப்படுத்தப்படாத மீதிகள், தொகைகள், ஏற்பாடுகள் என்பன வெல்லாம் மறைவொதுக்கங்கள் எனப்படும்.

★ மறைவொதுக்கங்கள் உருவாகும் வழிகள்:-

அ) இருப்புகள், நன்மதிப்புக்கள் போன்றவற்றில் பெறுமானங்களை உண்மைப் பெறுமதியிலும் பார்க்க குறைத்து மதிப்பிடல்
ஆ) மூலதனச் செலவுகளை வருமானச் செலவுகளாகக் காட்டுதல்.
இ) நிலையான சொத்துக்களுக்கு தேவையானதை விட மிகையாகத் தேய்மானமிடல்
ஈ) கடன்பட்டோருக்கான ஐயக்கடன்களின் ஏற்பாடுகள்; கழிவீட்டுக்கான ஏற்பாடுகளை மிகையாக ஏற்படுத்துதல்.

★ பின்வருவன காரணமாக மறைவொதுக்கத்திற்கு எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

அ) ஐந்தொகை உண்மையான நிதி நிலைமையைப் புலப்படுத்த மாட்டாது
(ஆ) சொத்துக்களின் பெறுமதிகள் குறைத்துக்காட்டப்படுவதனால் அவற்றுக்கு இழப்புக்கள் ஏற்படின் பெறக்கூடிய இழப்பீட்டுத்தொகை குறைவாகவே இருக்கும்.
(இ) சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்படுவதினால் கம்பனியின் பங்குகளின் பெறுமானம் வீழ்ச்சி அடையும்.
(ஈ) சில நிதிநிறுவனங்கள் தவிர ஏனைய கம்பனிகள் மறைவொதுக்கங்களைப் பேணக்கூடாதென கம்பனிகள்சட்டம் கட்டுப் படுத்துகின்றமை.

தை முக்கியத்துவப் படுத்தும் கருத்துக்களை கூறுவதாகவும் இவ் உபநிஷதங்களை சிறப்பிக்க முடிகின்றது.

ஏறத்தாழ கி.மு6ஆம் நூற்றாண்டு காலமளவில் எழுச்சி பெற்றிருக்கலாம் எனக் கருத்துக் கொள்ளப்பட்டிருக்கும் இவ் உபநிஷதங்கள் பிற்காலம் எழுந்த விஞ்ஞானக் கருத்துக்களுக்கு முன்னோடியாக விளங்கியது என்பதனை ''உபநிஷத்துக்களின் விஞ்ஞான ரகசியங்கள்'' என்ற நூலில் தெய்வீக விஞ்ஞானி டாக்டர் சாது சு. ஸ்ரீனிவாஸ் பல விளக்கங்களை வழங்கி நிரூபித்துள்ளார். இந்த விளக்கங்களால் பின் வந்த விஞ்ஞானக் கருத்துக்களுக்கும் அடிப்படையாக அமைந்த சிறப்பும் இந்நூலிற்குரியதோர் சிறப்பாகக் கருத்துக் கொள்ள முடிகின்றது.

ஆன்ம விடுதலை எனும் குறிக்கோளை மையமாகக் கொண்டு இறைவனுடன் ஆன்மாக்களை இணையவைத்து ஆன்மாக்களின் உயர் நிலையை அடையவைக்கும் கருத்துக் கொள்கைகளை உள்ளடக்கிய யோக நெறி கூறும் உபநிஷதங்கள் சன்னியாசத்தை விளக்கும் உபநிஷதங்கள் என எழுந்த உபநிஷதங்கள் ஆன்ம விடுதலைக்கு வழிகூறும் சிறப்புடையவையாகும்

எனவே தத்துவக் கருத்துக்கள், சமயக்கருத்துக்கள், ஒழுக்கவியல் கருத்துக்கள், விஞ்ஞான கருத்துக்கள் போன்ற பல்வகை சார்ந்த கருத்துக்களின் நிறைவாக அமைந்து இந்து நூல்களில் தனிச்சிறப்பை பெற்று விளங்கும் இந்த உபநிஷதங்களில் முக்கிய கருத்துக்கொள்கையாக விளங்கும் தத்துவக்கருத்துக்களாக எவ்வெவற்றை விளக்க வைக்கின்றது என நோக்குவோம் (தொடரும்)

உபநிஷதம் ஆராயும் முக்கிய தத்துவக் கொள்கைகள்


இன்று,

தமிழீழத்தில் தரமான உற்பத்திகளை மேற்கொண்டு மக்களுக்கு குறைந்த விலையில் சிறந்த சேவையினை மேற்கொள்ளும் எமது கூட்டுறவு நிறுவனத்தின் மற்றுமோர் தரமான உற்பத்தி

# JAF-FIX GUM
## (ஜவ் பிக்ஸ் கம்)

சகல தனியார், அரச கூட்டுத்தாபன, கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் காரியாலய மற்றும் இதர தேவைகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்கேற்ற வகையிலும் பல்வேறு அளவுகளில், மிகவும் குறைந்த விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. இதனை நேரடியாகவோ அல்லது சில்லறை வியாபாரிகளிடமோ மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

★ வாங்கி ஒருதடவை பயன்படுத்திப் பார்த்திடுவீர்
★ தேவைகளுக்கு இன்றே முந்துங்கள்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

பொது முகாமையாளர்-
யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின்கொத்தணி, 75-1, பலாலி வீதி கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி-9831)


## போசாக்கு கருத்தரங்கு

(வடமராட்சி)

பருத்தித்துறைபிரதேசசெயலர் பிரிவில் இறுதி நாள் போசாக்கு கருத்தரங்கு கலைவிழா கடந்த வெள்ளி காலை 9.00 மணிமுதல் மாலை வரை நடைபெற்றது.

பிரதேச செயலர் திரு.ஆ சிவசாமி தலைமையில் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக வலயம்-2 கல்விப்பணிப்பாளர் திரு.கே.கந்தசாமிகலந்து கொண்டார்.

போசாக்கு சம்பந்தமான பேச்சு கட்டுரை சுவரொட்டி போட்டி போன்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன, (யோ)


தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப்படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும்
முன்னணி நிறுவனம்

# பட மாடம்

சகலவிதமான
★ பூக்கண்ணாடி
★ சாதாரண கண்ணாடி
★ இனிப்பு கண்ணாடிப் பெட்டிகள்
★ மீன் தொட்டிகள்
★ 24 X 36 1/2 நூல் கண்ணாடி

ஆகியவற்றை மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

பட மாடம்
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி- 9836)

### சிந்தனைக்கு

குத்தும் ஈட்டிகளைக் கொண்டு மனிதன் தனக்கு ஒரு அரியணையை அமைத்துக் கொள்ளலாம். ஆனால், அதன் மேல் அவன் அமர முடியாது.

- கமிலோ - தெ. கபூர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 20-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண். 05

# புதிய அமைச்சும் இனப்பிரச்சினையும்

சிறிலங்கா ஜனாதிபதி முன்பின் அறிவித்தல் எதுவுமின்றி தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு என்றும் ஒரு அமைச்சை உருவாக்கி அதற்கு அநுரா பண்டாரநாயக்காவையும் அமைச்சராக்கியுள்ளார். வெளிப்படையாக நோக்கும் போது இனப்பிரச்சினை விவகாரத்தில் டி.பி. விஜேதுங்கா காட்டும் அக்கறையாகவே இது விமர்சிக்கப் பட வாய்ப்புண்டு.

இதனைப் பிரதிபலிக்குமாப்போன்றே வெளிவிவகார அமைச்சர் ஹமீத்தின் கூற்றுக்களும் உள்ளன. ''ஜனாதிபதி புதிதாக அமைத்துள்ள தேசிய இணக்க அமைச்சு 50 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் இப்பொழுதாவது இப்படியொரு அமைச்சு உருவாக்கப்பட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடையலாம்'' என்பதே அமைச்சர் ஹமீத் வெளியிட்டுள்ள அபிப்பிராயமாகும்.

அமைச்சர் ஹமீத் எதிர்பார்த்தது போன்று 50 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறானதொரு அமைச்சு உருவாக்கப்பட்டிருப்பின் சிலவேளை அது இனப்பிரச்சினையைப் போன்ற சிக்கலான பிரச்சினை உருவாகாமல் தடுத்திருக்கலாம் என்று பேச்சிற்கு ஒப்புக் கொள்ளக் கூடியதாயினும், நடைமுறையில் அது எத்துணை சாத்தியமானது என்பதில் சந்தேகமே.

ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்களே இனப்பிரச்சினை உருவாவதற்கும், அது இன்றைய பூதாகரவடிவத்தைப் பெறுவதற்கும் காரணமாக இருக்கையில் அமைச்சு ஒன்று இருப்பதினால் மட்டும் என்ன பயன்? இன்றுகூட இனப்பிரச்சினைக்கான காரணங்களில் சிலவற்றை தீர்ப்பதற்க வாக்குறுதி வழங்கியதோடு சட்டமும் இயற்றிய பின்பும் கூட அதனை அரசாங்கம் நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவில்லை. இந்நிலையில் அமைச்சு பெயரளவில் இருப்பதனால் பிரச்சினை தீர்க்கப்படுமா?

அதேசமயம் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சு இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசு கொண்டுள்ள அக்கறையினால் என்று கூறிவிட முடியாது. ஏனெனில் இனப்பிரச்சினை தீர்வில் அரசாங்கம் அக்கறை கொண்டதாக இருப்பின் அதற்கு ஒரு அமைச்சு தேவையில்லை.

# பொ. ஐ. மு.விலும் கழுத்தறுப்பு துடாவை கூறுகின்றார்

(கொழும்பு)

தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்க முன்னணிக்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமையில் போராடின. அப்போதும் கூட பொதுஜன ஐக்கிய முன்னணியின் சில தலைவர்கள் என்னை வீழ்த்துவதற்காக அடி மட்டத்தில் கழுத்தறுப்பு செய்துள்ளனர். இவ்வாறு தென் மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பீ. வை. துடாவை கூறியுள்ளார்.

அண்மையில் கொக்மாதுவ கிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும் போது மேலும் கூறுகையில், தென் மாகாண சபைத் தேர்தலின் போது இடதுசாரித் தலைவர்கள் அனைவரும் விகிதா சார வாக்குகளை பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள தமக்கு விருப்பமான வேட்பாளருக்கு அளியுங்கள் என்றே கூறினார்கள். அவர்கள் ஆட்சளின் பெயர்களையோ குறிப்பிட்ட இலக்கங்களையோ குறிப்பிட்டுக் கூறவில்லை. அப்படி இருக்கும் போது தேர்தல் பிரசாரத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சில தலைவர்கள் அடி மட்டத்தில் எனக்கு எதிராக சில கழுத்தறுப்பு வேலைகள் செய்திருக்கின்றனர்.

## கயிறு அடித்தலில் புதிய உலக சாதனை

(கொழும்பு)

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் கயிறு அடித்தலில் ஒரு புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

இவர் இந்த புதிய உலக சாதனையை நிலை நாட்ட முன்பு ஆறுமாதகால பயிற்சி பெற்று வந்தாரென தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சார்ஜன் ஐக்காபூனுநோமா நான்கு மணித்தியாலம் 37 நிமிடம் 44 வினாடிகள் தொடர்ச்சியாக 50888 துள்ளி கயிறு அடித்து உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இதன் மூலம் 1988 ஆம் ஆண்டு யூடி ரகுமான் நிலை நாட்டிய இரண்டுமணித்தியாலம் 25 நிமிடசாதனையை இவர் முறியடித்துள்ளார்.

## பிரதேச சபை செலவினம் குறைப்பிற்கு நடவடிக்கை

(கொழும்பு)

மாகாண சபைகள பிரதேச செயலாளர் பிரிவுகள் ஊடாக இது வரை அனுப்பி வந்த மூலதன செலவினத்தை இருபது சதவிகிதத்தால் குறைத்து விட இருப்பதாக சுற்று நிருபம் ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டங்களின் கீழ் பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபாவிலும் கூட இருபது சதவீதம் குறைக்கப்படும் என்று மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

இந்த நிதிவெட்டினால் வீதி அமைப்பு, சுகாதார சேவைகள் மற்றும் கல்வித் திணைக்கள வேலைகளில் பெரும் பாதிப்புகள் ஏற்படும் என்று கூறப்படுகின்றது.

இத்தகைய நிதிவெட்டினால் பெறப்படும் பணம் இராணுவ செலவீட்டிற்கு பயன்படுத்தப்படுவது தெரிந்ததே.

## உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிக்கான பரிசளிப்பு

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கடந்த ஏப்பிரல் மாத இறுதிப்பகுதியில் நடைபெற்ற கடற்புலிகள் மாவட்ட உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிக்கான பரிசளிப்பு விழா கடந்த மாதம் 28-ம் திகதி நடைபெற்றது.

உதவி மாவட்ட இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மங்கள விளக்கினை யாழ் மாவட்ட கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளரும், வடமராட்சி வடக்கு கடற் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளரும் ஏற்றி வைத்தனர்.

[illegible] அடுத்து மௌன

பட்ட பரிசளிப்பு விழாவில் யாழ் மாவட்ட கடற்புலிகள் மகளிர் பிரிவு அரசியல்துறைப் பொறுப்பாளர், முல்லை மாவட்ட கடற்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் பொருண்மியத்தின் அவசியம் பற்றியும் இதை தமிழீழத்தில் வளர்த்தெடுக்க முயலவேண்டும் எனவும் உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து இவ் எழுச்சிவாரப்போட்டிகளிலும் மருதங்கேணி வட்டத்தில் வதிவிட வேளாண்மைப் போட்டியிலும் வெற்றியீட்டியவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்

## குழாய்க்கிணறு அமைப்பு

கோப்பாயில் கிராமிய வங்கி, றோமன் கத்தோலிக்க வித்தியாசாலை ஆகியஇடங்களில் தேச நிர்மாணிகள் குழாய் கிணறுகளை அமைத்துள்ளனர்.

பிரமாண அடிப்படையில் ஒதுக்கீட்டு நிதியின் கீழ் நடைபெற்ற இவ் வேலையில் நீர் பெறுவதற்கான கைப்பம்பிகளும் பொருத்திக் கொடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிற்றூழியர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை அரசாங்க வைத்தியசாலையின் சிற்றூழியர் ஒருவர் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்றிரவு கடமை முடிந்து வீடு திரும்பும் போது திரவந்தியமேடு பகுதியிலுள்ள அவரது வீட்டு வாசலில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் சிற்றூழியராக பணிபுரியும் இத்தமிழர் மூன்று குழந்தைகளின் தந்தையாராவார். இப்பகுதியில் பொலிசாருக்கும், முஸ்லிம்களுக்குமிடையே மோதல் நிலை ஏற்பட்டிருந்தது தெரிந்ததே.

## மாடு வெட்டியவர்களுக்கு அபராதம் விதிப்பு

உரிய அனுமதியைப் பெறாமல் மாடு ஒன்றை வெட்டிய இருவரை தமிழீழ காவல் துறையினர் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

மீசாலை வடக்குபகுதியைச் சேர்ந்த இவ்விருவருக்கும் தலா 2500 ரூபா வீதம் கட்டும் படியும், தவறினால் தலா நூறு நாட்கள் வீதம் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (86)

## எறிகணைத் தாக்குதலை கண்டித்து ஆயர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் சென்ற வாரத்தில் நடைபெற்ற மோசமான எறிகணை வீச்சுத் தாக்குதல்கள் தொடர்பாக யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் அதிவண. கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவிற்கு கண்டனக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீது சென்ற வாரத்தில் ஏவப்பட்ட எறிகணைகள் பொது மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளிலேயே விழுந்து வெடித்துள்ளன. இதனால் அப்பாவிப் பொது மக்கள் பலர் உயிரிழக்கவும் பலர் காயமடையவும் நேரிட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் இலங்கையின் அதிமேற்றிராணியாருக்கும், பாப்பாண்டவர் திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆயர் இல்ல வட்டாரங்கள் மூலம் மேலும் தெரிய வருகிறது.

## குழந்தையைதூக்கிய குரங்கு பத்திரமாக விடுவித்தது

(கிளிநொச்சி)

வீட்டிற்குள் புகுந்த குரங்கொன்று அங்கிருந்த இரண்டு வயதுக் குழந்தை ஒன்றை தூக்கிச் சென்று மரத்தில் வைத்து சுமார் அரை மணித்தியாலம் விளையாடிய பின்னர் மீண்டும் பத்திரமாக வீட்டிற்குள் கொண்டுவந்து விட்டுள்ளது.

இச் சம்பவம் முழங்காவில் வட்டத்தில் உள்ள நாச்சிக்குடாவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் குழந்தைக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை என தெரிய வருகின்றது.

மேலும் மேற்படி குழந்தையைக் குரங்கு தூக்கிச் சென்ற சமயம் பெற்றோர் குளிக்கச் சென்றிருந்தனர் என தெரிய வந்தது.

## விதை உருளைக்கிழங்கு விநியோகிக்க நடவடிக்கை

(தொல்புரம்)

குடாநாட்டில் உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு விதை உருளைக் கிழங்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

1994/95 ஆம் வருட கால போகத்தில் மேற்படி பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ள உற்பத்தியாளரிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை கமநல சேவைகள் சம்பந்தமான நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும், இந்த மாதம் 21 ம் திகதி பிற்பகல் 4.30 வரை விண்ணப்பங்களை நேரடியாக தங்கள் பகுதியிலுள்ள பசுமை சேவை நிலையங்களில் ஒப்படைக்குமாறும் கமநல சேவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (41)

# ஒரு நாட்டுக்கு இரு பிரதமர்

இருப்பின் அதற்கு ஒரு அமைச்சு தேவையில்லை. ஜனாதிபதியே அதனைத் தீர்த்து வைப்பதற்கான போதிய அதிகாரம் கொண்டுள்ளார். ஆனால் ஜனாதிபதியோ இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காணும் வழிகளை எல்லாம் அடைத்து விட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கென ஒரு அமைச்சை உருவாக்யுள்ளமை வேடிக்கையானது.

உண்மையில் டி.பி. விஜேதுங்கா புதிய அமைச்சு ஒன்றை தேசிய இனத்திற்கென அமைந்துள்ளமையானது மக்களை ஏமாற்றும் நடவடிக்கையே ஒழிய வேறில்லை. இதற்கான அவசியம் ஏனெனில் வரவிருக்கும் தேர்தலில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்தும் அதில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும், இவ்விடயத்தில் ஐ.தே.கட்சி எந்தளவு தூரம் செல்லவுள்ளது என்பது பற்றியும் மக்கள் முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தற்பொழுது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றி நிறையவே பேசி வருகின்றது, தாம் பதவி ஏற்றால் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்போம் என்றும் அதற்கான தீர்வுத் திட்டம் தம்மிடம் தயாராகி வருகின்றது எனவும் தெரிவிக்கின்றது. சுதந்திரக்கட்சியின் இவ் அறிவிப்புக்களைப் பார்க்கும் போது அக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை தீர்விற்கென ஏதோ ஒரு திட்டத்தை முன்வைக்கவுள்ளது. இத்திட்டம் தமிழ் மக்களினால் ஏற்கப்படுமா நிராகரிக்கப்படுமா என்பதெல்லாம் வேறுவிடயம். ஆனால் சுதந்திரக்கட்சி தீர்வுத்திட்டம் முன்வைக்கப்போவது உறுதியாகவுள்ளது.

இந்நிலையில் ஐ.தே.கவும் இனப்பிரச்சினை குறித்து ஒரு தீர்வுத்திட்டத்தையோ அல்லது இனப்பிரச்சினை தீர்ப்பதற்கான தமது நடவடிக்கை பற்றியோ மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது, இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரே வழி என்ற நிலைப்பாடு இன்று ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இல்லை. இராணுவத்தீர்வில் சிங்கள மக்களில் கணிசமானோர் நம்பிக்கை இழந்துவிட்டனர். இது வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கும் சக்திகளையும் இழந்துவிட்டது. ஆகையினால் தான் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஒரு முற்போக்கான நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது என்பதைக் காட்டிக்கொள்ளும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிர்ப்பந்தத்தின் காரணமாகத் தான் தேசிய ஒருமைப்பாட்டிற்கென ஒரு அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளதே ஒழிய இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வைக் கொண்டு வருவதற்கு அல்ல. அவ்வாறு தீர்வைக் கொண்டு வருவது அரசாங்கத்தின் நோக்கமானால் அது அண்மைக்காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஏற்பட்டு வந்த நல்ல முயற்சிகளைக் குழப்பி அடித்திருக்காது.

---

ளரும் ஏற்றி வைத்தனர்.

அதனை அடுத்து மௌன அஞ்சலியுடன் ஆரம்பிக்கப்

யிலும் வெற்றியீட்டியவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## நீதிமன்றை அவமதித்த காதலர்கள் கைதாகினர்

(தென்மராட்சி)

மட்டுவில் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த திருமணமாகாத இருவருக்கிடையிலான காதல் விவகாரம் ஒன்று சம்பந்தமாக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு தாக்கல்செய்யப்பட்டது. இவ் வழக்கை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் விசாரணை முடிவுற்று தீர்ப்பளிக்கப்படும் வரையில் இருவரும் தமக்கிடையே சந்தித்துப் பேசக்கூடாது எனப் பணிப்புரை விடுத்திருந்தது. எனினும் மன்றின் தீர்ப்பை அவமதிக்கும் வகையில் இருவரும் தலைமறைவாகினர்.

பின்னர் தமிழீழ காவல் துறையினர் சம்பந்தப்பட்ட இருவரையும் கிளாலிப் பகுதியில் வைத்துக் கைது செய்தனர். சாவகச்சேரி நீதிமன்றில் இவர்கள் மீள ஆஜர் செய்யப்பட்ட போது நீதிமன்ற பிடியாணை இருப்பது தெரிந்தும் அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்த நால்வருக்கு தலா 3000 ரூபா வீதம் கட்டும்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அத்துடன் காதலர் இருவரும் நீதிமன்றத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (86)

## மக்கள் வங்கிக் கிளைகளில் 10 பதவி வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிராந்திய மக்கள் வங்கிக் கிளைகளில் பணி புரிவதற்கு மேலும் பத்துப் பேரை நியமிக்க வகை செய்ய வேண்டுமென அரசாங்கத்திற்கு மனுச் செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண பிராந்திய மக்கள் வங்கிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வங்கிகளுக்கு ஆட் சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சையின் முடிவுகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும். ஆனால் வெற்றிடங்களின் தொகை தெரிந்த பின்னரே பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட இருப்பதாகவும் கூறப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதே வேளை மக்கள் வங்கிக்கு மேலும் பத்து நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமென அரசிடம் கோரிக்கை விடப்பட்டிருப்பதாக மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் மேலும் கூறியுள்ளார்.

## திருடியவருக்கு தண்டனைவிதிப்பு

(தென்மராட்சி)

தனங்கிளப்பு சாவகச்சேரி பகுதியில் வீடு ஒன்றில் பணம் திருடிய ஒருவர் சாவகச்சேரி நீதிமன்றில் காவல் துறையினரால் ஆஜர் செய்யப்பட்டார்.

இழப்பீட்டுத் தொகையான பணத்தையும், குற்றப்பணமாக ஐந்நூறுரூபாவையும்கட்டும் படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. குற்றப்பணம் செலுத்த தவறின் நூறு நாட்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றின் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (86)

## ஒரு நாட்டுக்கு இரு பிரதமர் நியமிக்க முடியுமா?

### டி.என். சேஷன் கேள்வி

(ஆமதாபாத்)

நம் நாட்டுக்கு ஏன் இரண்டு பிரதமர்கள்? ஏன் இரண்டுதலைமை நீதிபதிகள் நியமிக்கப்படக்கூடாது என்று தலைமை தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆமதாபாத் நகரில் மல்லங்கர் நினைவு சொற்பொழிவு ஆற்றிய சேஷன் மேலும் கூறுகையில், தலைமை தேர்தல் ஆணையாளரின் அதிகாரத்தைக் குறைக்க அரசு இரண்டு கூடுதல் தேர்தல் கமிஷன்களை நியமனம் செய்துள்ளது. இதேபோல் இரண்டு பிரதமர்கள், இரண்டு தலைமை நீதிபதிகள் ஏன் நியமிக்கப்படக்கூடாது? அரசியலமைப்பின் அடிப்படை அமைப்பை யாரும் மாற்ற முடியாது.

தேர்தல் பிரசாரத்தின் போது மதத்தை பயன் படுத்துவது குற்றம். இதைத் தெரிந்து கொண்டும் ஜாதி மற்றும் மொழியின் பேரால் வாக்குகளைப் பெற அரசியல் வாதிகள் முயல்கிறார்கள்.

ஒரு அரசியல்வாதி நினைத்தால் 3 லட்சத்து 50 ஆயிரம் வங்கதேசத்தவரை வாக்காளராக சேர்க்கமுடிகிறது. அதேசமயம் வி. பி. சிங்கையும், சந்திரசேகரையும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கவும் முடிகிறது. இந்திய தேர்தலில் ஜாதி, பணம், ஊழல், ரௌடித்தனம் ஆகியவை ஆக்கிரமித்துள்ளன. இந்தியாவில் தேர்தல் புற்று நோய் போன்றது. எனவும் தெரிவித்தார்.

## வை. கோ கோரிக்கை

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீது சிறிலங்காவின் சிங்களக் கடற்படையினர் நடத்தும் தாக்குதல்கள் தொடர்ந்து வருவதால் சிறிலங்காவுடனான தூதுவர் மட்டத் தொடர்பு துண்டிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று மறுமலர்ச்சி தி. மு. க தலைவர் வை. கோபாலசாமி கோரிக்கை விடுத்துள்ளர்.

உலகக் கோப்பை உதைபந்தாட்டம்

## வட அயர்லாந்து அணி இத்தாலியை வென்றது

உலகக் கிண்ண கால் பந்துப் போட்டித் தொடரின் ஈ. பிரிவு ஆட்டத்தின் தொடக்கத்தில் அயர்லாந்து அணி இத்தாலி அணியை ஒரு கோல் போட்டு வெற்றியீட்டியது. இத்தாலி அணி இதற்கு முன்பாக மூன்று முறை சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. அயர்லாந்து அணியின் ரே. கூட்டன் ஆட்டத்தில் பன்னிரண்டாவது நிமிடத்தில் இருபத்தைந்து மீட்டர் தூரத்திலிருந்து அடித்து கோலைப் போட்டார். ருமேனியாவிற்கும் கொலம்பியாவிற்கும் இடையில் நடந்த ஆட்டத்தில் 3—1 என்ற ரீதியில் ருமேனியா வெற்றியீட்டியது. அமெரிக்காவுக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையிலான ஆட்டமும் தலா ஒரு கோல் வீதம் பெற்று ட்ராவில் முடிவடைந்தது.

## தமிழகத்தில் 10,000 பேர் பொலிசாரால் கைது

### -முன்னெச்சரிக்கை நடவடிக்கையாம்

(சென்னை)

தமிழ்நாட்டில் தி.மு.க இந்திய கம்யூனிஸ்ட்கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, எம்.ஜீ. ஆர் அண்ணா தி.மு.க மற்றும் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

69 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டும் முகமாக தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் இன்று அரச அலுவலகங்கள் முன்பு மறியல் செய்யப்போவதாக அறிவித்திருப்பதைத் தொடர்ந்து ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இக் கைதுகள் இடம் பெற்றிருப்பதாக மாநில பொலிசார் கூறியுள்ளனர்.

# பிரான்ஸ் இராணுவத் தலையீட்டுக்கு ருவாண்டா கிளர்ச்சியாளர் எதிர்ப்பு

(கிகாலி)

ருவாண்டாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் பூசலைத் தீர்ப்பதில் பிரான்சு இராணுவம் தலையிடுவதை கிளர்ச்சிக் குழுக்கள் வன்மையாக எதிர்த்துள்ளது. பிரான்சு அமைதி காக்கும் படை தாக்கப்படும் என்றும் கிளர்ச்சிப் படையான தேசபக்த முன்னணி எச்சரித்துள்ளது.

இம் மன்னணியின் பேச்சாளர் மேஜர்வில்சன் ருசாட்யிரே மேலும் கூறுகையில் நாட்டின் எல்லாப் பகுதிகளையும் வெற்றி கொள்வதன் மூலம் சிவிலியன்கள் கொல்லப்படுவதை கிளர்ச்சியாளர்கள் நிறுத்திவிட முடியும் எனவும் தெரிவித்தார்.

## பிரேமாவின் மற்றொருசிலை ஹேமாவினால் திறப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் மற்றுமோர் உருவச்சிலை நேற்று கொலன்னாவ வெலம்பிட்டிய சந்தியில் திருமதி ஹேமா பிரேமதாசவினால் திறந்து வைக்கப்பட்டது.

சிலைதிறப்பு விழாவில் பேசிய திருமதி ஹேமாபிரேமதாசா, ஜனாதிபதி பிரேமதாசா போன்று வேறு எந்தத் தலைவர்களும் சேவை செய்யவில்லை எனக் குறிப்பிட்டார். இந் நிகழ்வில் உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீர சிங்க மல்லிமராச்சி, தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் ஏ.எம்.எம். அஸ்வர், ஹட்சன் சமரசிங்க, கொழும்பு பதில் மேயர் கே. கணேசலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### ஆறு உயர்

பிரிகேடியர் எஸ். எச். எஸ். கொட்டேகொட, கேணல் எஸ். டபிள்யூ. எல். தவுலகல மற்றும் கேணல் றஞ்சித் டி சில்வா ஆகிய அதிகாரிகளின் பதவி உயர்வுகளே ஒரு வருடத்திற்கு மறுக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ விசாரணைக் குழுவின் அறிக்கைகள் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை இவ்வாறு பெயர் குறிப்பிட்ட ஆறு அதிகாரிகளில் இருவர் ஏற்கனவே பதவிஉயர்வு பெற்றிருக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

# ஜனசக்தி ஏமாற்று வித்தை அதனை ஒழிப்போம்

## சந்திரிகா தெரிவிப்பு

''ஜனசக்தி'' போன்ற ஏமாற்று வித்தைகளை ஒழித்து அவற்றுக்குப் பதிலாக புதிய திட்டமொன்றை நாம் அறிமுகப்படுத்துவோம்'' என மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கிளை காரியாலயமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்;

''இன்றைய அரசாங்கம் பதவியில் இருக்கும் வரை வடக்கு கிழக்குப் பிரச்சினைகளுக்கு ஒரு போதும் தீர்வு காணாது. யுத்தத்தை நிறுத்தி சிறுபான்மையோரின் பிரச்சினைகளுக்கு எமது அரசாங்கம் தான் தீர்வொன்றைக்காணும். அதே போன்று சிறுபான்மையோரின் உரிமைகளை மதித்து அதனைக் காப்பாற்றும். ஜனசக்தி போன்ற பொய் வேலைத் திட்டங்களை மக்களுக்கு வழங்க நாம் ஒரு போதும் முன்வரமாட்டோம். திட்டமிட்ட ஒழுங்கான செயற் திட்டங்களையே மக்களுக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார்.

### தமிழாராய்ச்சி

சுடன் அல்லது பேராசிரியர் டாக்டர் எஸ். ராஜாராம், மொழியியற்றுறைத்தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 613005- தமிழ்நாடு என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்,

### விபரங்கள்

வெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி பிரேமதாசா கொலை குறித்து மீள் விசாரணை நடத்த வேண்டும் என பிரேமதாசா குடும்பத்தினர் விடுத்த கோரிக்கையை நிராகரித்த அரசு தற்போது கொலைச் சந்தேக நபரை பிடிக்க தகவல் தருபவருக்கு சன்மானம் அளிக்க முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### யார் வெல்வார்

வரும் நிலைமைகளுக்கேற்ப இறுதித்தீர்மானங்களும் மாற்றப்படுவதுண்டு என்றார்

கேள்வி: ஐ. தே. க. தனது ஜனாதிபதி வேட்பாளர் யார் என அறிவித்து விட்டது. ஆனால் இன்னமும் நீங்கள் உங்கள் வேட்பாளர் யார் என்பதை சந்தேகத்திலேயே வைத்துள்ளீர்கள்?

திரு. சேனநாயக்கா: நியமனத் தினம் நெருங்கும் போது நாம் அதனை றிவிப்போம்.

திருமதி குமாரணதுங்கா: வேட்பாளர் நியமன தினத்துக்கு மூன்று வாரங்கள் இருக்கையிலேயே பிரேமதாசாவின் பெயர் அறிவிக்கப்பட்டது.

கேள்வி; ஐ. தே. கட்சி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டதே?

சந்திரிகா; நாம் எமது தேர்தல் பிரசாரத்தை ஏழு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்துவிட்டோம். எமது பிரசாரம் கிராமமட்டத்தில் நடைபெறுகிறது.

கேள்வி: நீங்கள் ஏற்கனவே அறிவித்த வேட்பாளர் வெற்றி பெறுவார் என்பதில் சந்தேகம் உண்டா?

சேனநாயக்கா: எங்களுக்கு சந்தேகமில்லை. ஆனால் நாம் யதார்த்தபூர்வமானவர்களாக இருக்க விரும்புகிறோம். யார் தேர்தலில் இலகுவாகவும் கெட்டித்தனமாகவும் வெற்றிபெறுவார்கள் எனப்பார்க்க விரும்புகிறோம் என்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஏனைய வேட்பாளர்கள் போட்டியிடும் சாத்தியம் பற்றி கேட்டபோது சுதந்திரக் கட்சியின் வாக்குகளைப் பிரிப்பதற்கு தமிழர் ஒருவரையும் சிங்களத் தீவிரவாதி ஒருவரையும் போட்டிக்கு நிறுத்த ஐ. தே. க முயற்சிப்பதாக எனக்கு தெரியவந்துள்ளது என்று சந்திரிகா கூறினார்.

# மக்கள் மீதான ஷெல் வீச்சு பயனெதையும் தராது

## பி.பி.ஸி செய்தியாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாண மக்கள் மீது அரச படையினர் கண்மூடித்தனமான எறிகணைகளை ஏவுவதால் பயனேதும் ஏற்படப் போவதில்லை. மாறாக இது மக்களை அந்நியப்படுத்தவே உதவும் என பி.பி.ஸி கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்களுக்கும் இத்தகைய தாக்குதல்கள் பழகிவிட்ட ஒன்றாகிவிட்டதை தாம் நேரில் அவதானித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

# கசிப்பு என நினைத்து போமலின் பருகியவர்

சவச்சாலை ஒன்றில் பிரேதம் ஒன்றை பதப்படுத்திக் கொண்டிருக்கும் போது கசிப்பு என நினைத்து டின்னில் இருந்த போமலின் மருந்தை உட்கொண்ட 35வயதுடைய நபர் ஒருவர் கராப்பிட்டிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமானார். இச் சம்பவம் ஹினிதுமை நாகொடையில் நடைபெற்றது.

மேற்படி சவச்சாலையின் உரிமையாளரான இவ் இளைஞர் கசிப்பு என நினைத்து அங்கிருந்த பிரேதங்களுக்குப் போடப்படும் போமலின் மருந்தை உட்கொண்டதாகமரண விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

## ''விருட்சம்'' வெளியீடு

யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மன்றத்தினரால் வருடாந்தம் வெளியிடப்படும் ''விருட்சம்'' சஞ்சிகையின் 7வது இதழ் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது,

# சுழிபுரம் மேற்கு பகுதியில் புதுவித காய்ச்சல் பரவுகிறது

(தொல்புரம்)

சுழிபுரம் மேற்குப் பகுதியில் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் புதுவிதமான காய்ச்சல் நோய் ஒன்றுபரவி வருகிறது

இந்தக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர் தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலை ஆகியஇடங்களில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இதேவேளை இந்த நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளர் சிலர் யாழ் போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த நோயினை இனங்காண்பதற்காகசுகாதார சேவைகள் பிரிவு பிராந்தியப் பணிப்பாளர் தலைமையில் சுகாதாரக் குழுக்கள் மேற்படி கிராமங்களில் அதிதீவிர கவனம் செலுத்தி வருகின்றது. அங்குள்ள நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு இரத்த பரிசோதனை செய்தும், குடிநீர் கிணறுகளுக்கு குளோறின் மருந்து போட்டும், நோயினை பரவாமல் தடுப்பதற்கான அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது வீசும் பலத்த காற்றின் மூலமும், குடிசனம் நெருக்கமாக வாழும் பகுதிகளில் காணப்படும் சுகாதாரப் பற்றாக்குறை காரணமாகவும், இந் நோய் இலகுவில் பரவும் நிலை தென்படுவதாகவும், நோய்க்கான அறிகுறி தென்பட்டதும் அண்மையில் உள்ள அரச மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெறுமாறு சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

### தடுப்புக்காவலிலு

வரத்து செலவுக்காக சுமார் 750 ரூபாவையும், இவர்களின் சுயதொழில் முயற்சிக்கு பதினையாயிரம் ரூபாவிலிருந்து இருபத்திஐயாயிரம் ரூபா வரையிலான பணத்தை வழங்குவதற்கு ஒரு வெளிநாட்டு நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் மேலும்

உ

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் அமரர்கள் வித்துவான் சி. ஆறுமுகம், தேவன்- யாழ்ப்பாணம் ஆகியோர் ஞாபகார்த்த

**கவிதை, பேச்சுப் போட்டிகள் - 1994**

எமது கழகத்தால் நடத்தப்படவுள்ள மேற்படி போட்டிகளுக்குத் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். கவிதை, பேச்சு ஆகிய இரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு அண்மையில் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்கப் பதக்கங்கள் பரிசில்களாக வழங்கப்படும். அத்தோடு அவர்கள் தகுதிகண்டு கம்பன் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும்.

★ உடன் தரப்படும் தலைப்பில் பேசவும் கவிதை ஆக்கவும் தகுதியுள்ள முப்பது (30) வயதுக்குட்பட்ட இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

★ போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை ரூபா இருபத்தைந்து ( 25/- ) செலுத்தி கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் - பூபாலசிங்கம் புத்தகசாலை.
சுன்னாகம் - தனலக்சுமி புத்தகசாலை.
நெல்லியடி-சிவசக்தி ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை வீதி,
சாவகச்சேரி - சிவம் மெடிக்கல்ஸ், கச்சாய் வீதி.

★ விண்ணப்பங்கள் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்

முகவரி: போட்டி இணைப்பாளர்,
அகில இலங்கைக் கம்பன் கழகம்,
'கம்பன் கோட்டம்'
300, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**சுவையான செய்தி**

உங்கள் நாளாந்த சேமிப்பில்
எமது பங்களிப்பு
தரம் நிறைந்த
உணவு சிற்றுண்டி வகைகளின்
விலைகள் குறைக்கப்பட்டுள்ளன
உழைப்போர்க்கு உகந்த விலைகள்
சுவைப் பிரியர்க்கு சிறந்த உணவகம்
உங்கள் வைபவங்கள் சிறப்புற
எமது பரிமாறு சேவை

300, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

★ விண்ணப்ப முடிவு திகதி 1994 ஜூலை 02

★ ''கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்'' ★

தி. திருநந்தகுமார் (தலைவர்) ஆறு. திருமுருகன் (போட்டி இணைப்பாளர்) க. குமாரதாசன் (செயலர்)

(சி-9838)

உங்கள் வைபவங்கள் சிறப்புற
எமது பரிமாறு சேவை

இன்றே வருக

**சுவையருவி**

லெப். கேணல் இராசன் தெரு
யாழ்ப்பாணம்.

(சி-9834)

மருத்துவமனை

கோவில் பிரதேசத்தில் 'அன்பு மருத்துவமனை' என்ற பெயரில் மருத்துவமனை ஒன்றை நோயாளர் நலன்புரிச் சங்கம் திறந்து வைக்கின்றது.

நாட்டு நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் மேலும் யினர் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. தெரிய வருகின்றது.

(41

# அணி திரள்வீர் ............

# கண்டன பேரணியில்............

# கூட்டுறவாளர்களே ............

நீர்வேலி பல நோ. கூ. சங்க தலைவரும், வலிகாம கோட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் துணைத் தலைவருமான வே. சின்னத்தம்பி அவர்கள் விமானக்குண்டுவீச்சால் கொல்லப்பட்டதைக் கண்டித்து 21-6-94 செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணிக்கு மாவட்ட கூட்டுறவு சபையில் இருந்து ஆரம்பமாகி அரச செயலகத்துடன் முடிவடையும்.

# கண்டன பேரணியில்

வலிகாம கோட்டத்துக்குட்பட்ட அனைத்து கூட்டுறவாளர்களும் அணிதிரண்டு எமது உணர்வு பூர்வமான கண்டன எழுச்சியை பறைசாற்றுமாறு அறைகூவல் விடுகின்றோம்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் | பண்டத்தரிப்பு பல நோ. கூ. சங்கம் |
| நல்லூர் பல நோ. கூ. சங்கம் | தெல்லிப்பளை பல நோ. கூ. சங்கம் |
| சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் | அளவெட்டி - மல்லாகம் பல நோ. கூ. சங்கம் |
| மானிப்பாய் பல நோ. கூ. சங்கம் | நீர்வேலி பல நோ. கூ. சங்கம் |
| சங்கானை பல நோ. கூ. சங்கம் | அச்சுவேலி பல நோ. கூ. சங்கம். |

வலிகாம கோட்ட பல நோ. கூ. சங்கங்களின் ஒன்றியம்

(சி-9839)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 . 06 . 20**

**திங்கள் - இரவு**

08.01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08.20 - செய்திச்சரம்
08.30 - செய்திகள்
08.40 - தரிசனம் - யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் தணிகைச்செல்வி அவர்களுடனான செவ்வி.

**1994 . 06 . 21**

**செவ்வாய் - காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - இன்றைய தாரகை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப் பாடல்கள்.

## யாழ். ஸ்ரீதரில்

Aronold Schwarzenegger நடித்த

**PREDATOR**

தினசரி
மாலை 4, 6மணி

சனி ஞாயிறு
காலை 10. 30 மணி
மாலை 4, 6மணி

(சி- 9822)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 14-03-1940



மறைவு 21-05-1994

**அமரர் திரு. சேதுபதி சிவயோகசுந்தரம்**

21-05-94-ல் இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல 9, பிறவுண் வீதி
5-ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

சி-9840)

## மரண அறிவித்தல்

**திருமதி சவிரியாச்சி வஸ்தியாம்பிள்ளை**

கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், 48 மார்ட்டின் றோட் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி வஸ்தியாம்பிள்ளை சவிரியாச்சி (நல்லபிள்ளை) 18-6-94-ல் காலமானார். இவர் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், இன்பம், மலர், ரீட்டா, செபமணி, காலஞ்சென்ற சிசிலியா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 20-06-94 (இன்று) காலை 8-00 மணியளவில் புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலிக்காக கொண்டு செல்லப்பட்டு, பின்னர் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

48 மார்ட்டின் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செபமணி வஸ்தியாம்பிள்ளை

(8610)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.